பக்கங்கள் எட்டு
விலை ரூபா: 5.00

# வலம்புரி
VALAMPURI

லாலாசோப்
சன்சயின் சோப்
ஏக விநியோகஸ்தர்
வேணி களஞ்சியம்
கே. கே. எஸ். வீதி
யாழ்ப்பாணம்,
லாலாசோப் அச்சுவேலி

சங்கு 01 வள்ளுவர் ஆண்டு 2031 ஐப்பசி 27 ஞாயிற்றுக்கிழமை (12-11-2000) தொ. பேசி 3378 ஒலி: 328

★ நிபந்தனையுடனான பேச்சும்; யுத்த நிறுத்தமும் இல்லை.

# புலிகள் ஆயுதத்தை கைவிடும் வரை இராணுவ நடவடிக்கை தொடரும்!

## தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தத்தை தீவிரப்படுத்தி பிரதமர் சூளுரை!!

(நமது விசேட நிருபர்)

இலங்கையில் நிலவும் பயங்கரவாதத்தை யுத்தத்தின் மூலம் தான் ஒழிக்கலாம். பேச்சுவார்த்தைகளின் மூலம் பயங்கரவாதத்தை முடிவுக்கு கொண்டுவர முடியாது,

தமிழீழ விடுதலைப் புலிகள் போராட்டத்தை விடுத்து மக்கள்விடுதலை முன்னணி (ஜே. வி. பி), ஈ. பி. டி பி. என்பவற்றைப் போல் ஆயுதங்களைக் கைவிட்டு ஜனநாயக வழிக்கு வரவேண்டும்.

இவ்வாறு பிரதமமந்திரி ரட்ணசிறிவிக்கிரமநாயக்கா தெரிவித்துள்ளார். கொழும்பிலிருந்து வெளி வரும் ஆங்கில தினசரி ஒன்றுக்கு அவர் பேட்டி அளித்துள்ளார். அப்பேட்டியில் பிரதமர்

(8ஆம் பக்கம்பார்க்க)

## விறகு வெட்டச் சென்ற 15 பேரை காணவில்லை
### மட்டக்களப்பில் சம்பவம்

(ஏறாவூர்)

மட்டக்களப்பு செங்கலடி பகுதியிலுள்ள கோப்பாய் காட்டுப் பகுதிக்கு விறகு சேகரிக்கச் சென்ற 15 பேர் இது வரைவீடுதிரும்பவில்லையென்றுமட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாகிர்மௌலான விடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி சம்பவத்தில் காணாமல்போனவர்களைத் தேடிக் கண்டுபிடிப்பது தொடர்பாக மட்டக்களப்புமாவட்ட இராணுவ இணைப்பதிகாரி கேணல் பி ஆர். எல் அன்ரனி ஸீடன் பாராளுமன்ற உறுப்பினர் மௌலானா தொடர்பு கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(ந-2)

## உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் 2001 ஆம் ஆண்டு நடத்தப்படும்?

(கொழும்பு)

எதிர்வரும் ஏப்ரல் மாதம் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை நடத்துவதற்கு அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

இத்தேர்தலை நடத்துவதற்கு வேண்டிய சகல ஏற்பாடுகளையும் மேற்கொள்ளுமாறு மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சர் நந்தமித்ர எக்கநாயக்காவிற்கு ஜனாதிபதி சந்திரிகா பணிப்புரை விடுத்துள்ளார்.

ஜனாதிபதியின் இப்பணிப்புரையை அடுத்து மாகாண சபைகள் அமைச்சர் குழு ஒன்றினை அமைத்து உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்துவதற்கு வேண்டிய ஆயத்தங்களை மேற்கொண்டுவருவதாகவும் குறித்தமாதத்தில் தேர்தல் நடைபெறாவிடில் ஒரு

(8 ஆம்பக்கம் பார்க்க)

## உடன் நிவாரணம் வழங்க அமைச்சர் டக்ளஸ் பணிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் செயலக களஞ்சியப் பொறுப்பாளர் விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதையடுத்து, தடைப்பட்டிருந்த நிவாரணத்தை உடன் வழங்குமாறு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சரும் ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா உத்தரவிட்டுள்ளார்.

கடந்த வாரம் முதல் களஞ்சியப் பொறுப்பாளர் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருப்பதனால், களஞ்சியம் பூட்

(8ஆம்பக்கம் பார்க்க)

## புலிகள் தரப்பில் உயிரிழந்தோர்

(வவுனியா)

தென்மராட்சி, மற்றும் எழுதுமட்டுவாள் பகுதிகளில் கடந்த 8ம் திகதி இடம் பெற்ற மோதல்களின்போது உயிரிழந்த விடுதலைப் புலிகளின் விபரம் வருமாறு:

- மேஜர் மோகன் [இராசையா ஜெயசீலன்] வவுனியா
- அடிமைநிலா [செல்லத்துரை சிவரஞ்சினி] யாழ்ப்பாணம்
- கலையழகி [முத்துராசாசிறிபரிமளா] விஸ்வமடு

31 - 10 - 2000ல் வவுனியா இரணைஇலுப்பைக்குளத்தில் இடம்பெற்ற மோதலில்:

- நவரத்தினம் [கந்தசாமி பிரேம்குமார்] திருமலை

ஆகியோர் உயிரிழந்துள்ளனர்

[ம]

### யாழ் குடாநாட்டிற்கான
## தரைவழிப் பாதையை திறக்க ச. செ. சங்கத்திடம் கோரிக்கை

(வவுனியா)

யாழ். குடா நாட்டுக்கான தரைவழிப்பாதையைத் திறக்குமாறு கோரி இலங்கையில் உள்ள சர்வதேச செஞ்சிலுவைச்சங்கக்குழுவின்வதிவிடப் பிரதிநிதிக்கு வன்னியில்உள்ள மக்கள் கையொப்பமிட்டு கடிதம் ஒன்று அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப் படுகிறது.

வடபகுதி அபிவிருத்தி புனர் வாழ்வு புனரமைப்பு வடக்குக்கிழக்கு தமிழ் விவகாரம் இந்துகலாச்சாரஅமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஊடாக இக்கடிதம் ஜனாதிபதிக்கும் அனுப்பிவைக்கப் படும்.

இந்தமகஜரின் பிரதிகள்

(8ம் பக்கம் பார்க்க)

## இனப் பிரச்சினை தொடர்பாக; அரசு விடுதலைப் புலிகளுடன் பேச வேண்டும்; தமிழ்க்கட்சித் தலைவர்கள் ஒரே குரலில் தெரிவிப்பு

(கொழும்பு)



தமிழ்க் கட்சிகளுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தி காலத்தை வீணாக்க் கடத்தாமல்யுத்தத்தை உடனடியாக நிறுத்தி தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நேரடியாகப் பேச்சவார்த்தைகளை ஆரம்பிப்பதையே அரசு உடனடியாகச் செய்ய வேண்டிய முக்கிய விடயமாகும் என்று தமிழ்க்கட்சித் தலைவர்கள்ஒருமனதாகத் தெரிவித்துள்ளார்கள்.

தமிழர் விடுதலைக் கூட்டணி ஈ.பி.டி.பி. அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் ரெலோ ஆகிய தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளார்கள்.



ஐக்கிய தேசியக் கட்சியுடன் பேசுவதை விடுத்து தமிழ்க் கட்சிகளுடன் அரசு பேசி இணக்கம் காண வேண்டுமென்று ஐக்கிய தேசியக்கட்சித் தலைவரும் எதிர்க் கட்சித்தலைவருமான ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்த கருத்திற்கே தமிழ்க்கட்சித் தலைவர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உப தலைவரும்யாழ். மாவட்ட எம்.பி யுமான வீ. ஆனந்தசங்கரி கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது, எங்களுடன் அரசு பேச்சுவார்த்தை நடத்தவேண்டுமென்று எதிர்க்கட்சித் தலைவர்ரணில் விக்கிரம சிங்கா கூறுவது நல்லதொரு விடயமாகும் ஆனால் இப்போதைய உடனடித்தேவையாக இருப்பது, யுத்தம் நிறுத்தப்பட்டு விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதேயாகும்.



தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேசினால் மட்டுமே இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணமுடியும் எங்களுடன் பேசுவதன் மூலம் இனப்பிரச்சினைக்கான தீர்வை எட்ட முடியாது எனக் கூறியுள்ளார்.

ஈ.பி டி பியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா கருத்துத் தெரிவிக்கையில் இனப்பிரச்சினை தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை நடத்துவதென்பது நல்லதொரு முறையாகும் இதனை ஈ. பி. டி.பி வரவேற்கிறது (8ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பிரதேச சபைத் தலைவர் உட்பட ஒன்பது பேர் கைது

(கொழும்பு)

மலையகப் பகுதியில் அண்மையில் இடம்பெற்ற வன்செயல்களுடன் தொடர்புபட்டோர் என்ற சந்தேகத்தின் பேரில், நுவரெலியா பிரதேச சபைத் தலைவர் உட்பட 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த ஒரு சில தினங்களாக மலையகத் தோட்டப்பகுதிகளில் பொலிஸாரும் படையினரும் இணைந்து நடத்திய தேடுதலின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டு விசாரணையின் பொருட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

நுவரெலியா பிரதேச சபைத் தலைவர் நடேசன் சதாசிவம், மலையக மக்கள் முன்னணியைச்சேர்ந்த இராமசாமி இராமலிங்கம் மற்றும் தோட்டத்தொழிலாளர்கள் ஆகியோர் கைது செய்யப்பட்டவர்களில் அடங்குவர்.

இதேசமயம், ஆயுதங்களை மறைத்து வைத்திருப்பதாக கிடைத்த தகவல்களை அடுத்தே இவர்களை கைது செய்திருப்பதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (க-உ)

## யு.என். எச். சி. ஆர். உதவி

(கரணவாய்)

தென்மராட்சிப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து கரணவாய் பகுதி முகாம்களில் தங்கியுள்ள குடும்பங்களிற்கு யு. என். எச். சி. ஆர். நிறுவனத்தினால் அரிக்கன் லாம்புகள் விநியோகம் செய்யப்பட்டது. (செ-27)

★ ★ ★

(கல்வயல்)

இடம்பெயர்ந்து கரவெட்டிப் பகுதியில் மெதடிஸ்த மிஷன், ஞானாசாரியார் சல்லூரி ஆகிய பாடசாலைகளில் தங்கியிருந்த குடும்பங்களுக்கு இப்பாடசாலைகளுக்கு அருகாமையில் யு. என். எச். சி. ஆர். இனால் தற்காலிக குடிசைகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. (செ-111)

## யாழ். மாநகரசபையின் பாதுகாப்பு சேவை

பொதுக்களை விபத்துக்களிலிருந்து பாதுகாக்கும் பொருட்டு பாதுகாப்புச் சேவை ஒன்றை யாழ் மாநகர சபையினர் மேற்கொள்ள உள்ளனர்.

மேற்படி சேவையில் ஈடுபடுவோருக்கான பயிற்சிப்பட்டறை ஒன்று யாழ். மாநகர சபையில விரைவில் இடம்பெற உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான விபரங்கள் விரைவில் அறிவிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-12)

## வலிகாமம் கிழக்கு பிரதேசசபை, நீர்வேலி

## 2001-ம் ஆண்டுக்கான கேள்வி அறிவித்தல்

01. கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி :- 20.11.2000 நண்பகல் 12.00 மணிவரை
02. கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி:- 21.11.2000 நண்பகல் 12.00 மணிவரை.
03. கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி:- 21.11.2000 பி.ப. 2.00 மணி
04. கேள்விப் பத்திரங்களை அந்தந்த உப அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
05. மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

கேள்விப் படிவங்கள் இணைப்பிரதியில் தயாரித்து மூலப்பிரதியை இவ் அலுவலகக் கேள்விப் பெட்டியிலும் இணைப்பிரதியை பிரதேச உள்ளூராட்சி உதவியாளர், இல 29, செட்டித்தெரு, நல்லூர் என்ற முகவரிக்கும் அனுப்பி வைக்கப்படவேண்டும்.

| குத்தகை விபரம் | கேள்விப் பத்திரப் பணம். | கேள்வி வைப்பு | ஆகக் குறைந்த தொகை |
|---|---|---|---|
| **அச்சுவேலி உப அலுவலகம்.** | | | |
| 01. அச்சுவேலி மாட்டிறைச்சிக்கடை | 250.00 | 2000 00 | 79200.00 |
| 02. அச்சுவேலி ஆட்டிறைச்சிக்கடை | 100.00 | 1000.00 | 13200.00 |
| 03. வளலய்த்தபாலை பொதுச்சந்தை | 50.00 | 100.00 | 440.00 |
| 04. அச்சுவேலி பொதுச்சந்தை (துவிச்சக்கர வண்டி தரிப்பிடம் உட்பட) | 500.00 | 5000.00 | 728200.00 |
| **புத்தூர் உப அலுவலகம்.** | | | |
| 01. புத்தூர் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 250.00 | 2000.00 | 48950.00 |
| 02. வாதரவத்தை மாட்டிறைச்சிக்கடை | 100.00 | 250.00 | 660.00 |
| 03. புத்தூர் மத்தியசந்தை ஆட்டிறைச்சிக்கடை | 100.00 | 150.00 | 8800.00 |
| 04 ஆவரங்கால் மரக்கறிச்சந்தை | 50.00 | 100.00 | 1320.00 |
| 05. புத்தூர் பொதுச்சந்தை | 100.00 | 250.00 | 4950.00 |
| 06. ஆவரங்கால் மீன்சந்தை | 25.00 | 50.00 | 350.00 |
| **நீர்வேலி உப அலுவலகம்.** | | | |
| 01. நீர்வேலி வடக்கு மீன்சந்தை | 100.00 | 150.00 | 3500.00 |
| 02. நீர்வேலி ஆட்டிறைச்சிக்கடை | 50.00 | 150.00 | 1200.00 |
| 03. நீர்வேலி மாட்டிறைச்சிக்கடை | 250.00 | 1000.00 | 11500.00 |
| **கோப்பாய் அலுவலகம்.** | | | |
| 01. கோப்பாய் வடக்கு சந்தை | 50.00 | 150.00 | 2750.00 |
| 02. கோப்பாய் வடக்கு மாட்டிறைச்சிக்கடை | 250.00 | 1500.00 | 33550.00 |
| 03. இருபாலை சந்தை மாட்டிறைச்சிக்கடை | 300.00 | 2500.00 | 73150.00 |
| 04. இருபாலை மீன்சந்தை | 50.00 | 150.00 | 1650.00 |
| 05. இருபாலை சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 100.00 | 150.00 | 2475.00 |
| 06. கோப்பாய் வடக்கு ஆட்டிறைச்சிக்கடை | 100.00 | 150.00 | 2475.00 |
| **உரும்பிராய் உப அலுவலகம்.** | | | |
| 01. உரும்பிராய் மாட்டிறைச்சிக்கடை | 300.00 | 2500.00 | 88000.00 |
| 02. உரும்பிராய் ஆட்டிறைச்சிக்கடை | 200.00 | 1000.00 | 18700.00 |
| 03. ஊரெழு மாட்டிறைச்சிக்கடை | 250.00 | 2000.00 | 47000.00 |
| 04. ஊரெழு ஆட்டிறைச்சிக்கடை | 100.00 | 250.00 | 4000.00 |
| 05. உரும்பிராய் மத்திய சந்தை | 250.00 | 1500.00 | 49500.00 |

பூ. குணசிங்கம் ஜே.பி.யு.எம்
தவிசாளர்,

வலிகிழக்கு பிரதேசசபை,
தலைமை அலுவலகம்,
நீர்வேலி.
2000.11.10

(கி-1022)

## பூவரச மரத்திலிருந்து வீழ்ந்தவர் படுகாயம்

பூவரச மரத்திலிருந்து வீழ்ந்த குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சுழிபுரத்தைச் சேர்ந்த சங்கரன் கந்தசாமி (வயது50) என்பவரே இவ்வாறு மரத்திலிருந்து வீழ்ந்து படுகாயமடைந்தவராவர். (12-ஸ்ரீ)

## தாதியர் பரீட்சை முடிவுகள் வெளியாகின

(கந்தர்மடம்)

யாழ். போதனா வைத்திய சாலை தாதியர் பயிற்சிக் கல்லூரி மாணவர்களின் இறுதி முதலாவது குறை நிரப்பு பரீட்சை முடிவுகள் வெளியாகி உள்ளன.

ஏ 97 பிரிவில் பரீட்சைக்குத் தோற்றிய ஒன்பது பேரில் எட்டுப் பேர் சித்தி எய்தியுள்ளனர்.

இவர்களுக்குரியதாதியர்நியமனம் விரைவில் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (செ-37)

## ரயில் தடம் புரண்டது எட்டு பெட்டிகள் சேதம்

(கொழும்பு)

திருகோணமலையிலிருந்து கல்லோயா நோக்கிச் சென்று கொண்டிருந்த சரக்கு புகையிரத வண்டி தடம்புரண்டதில் எட்டுப் பெட்டிகள் சேதம் அடைந்துள்ளது.

நேற்று முன்தினம் சீனக்குடா 181 ஆம் கட்டைப்பகுதியிலேயே இப்புகையிரதம் தடம் புரண்டது.

ரயில் தடம் புரண்டதில் 200 மீற்றர் வரையான புகையிரதப் பாதை சேதமடைந்துள்ள போதிலும் உயிர்ச் சேதம் எதுவும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இச் சரக்கு ரயிலில் பதின்மூவாயிரம் சீமெந்துப் பைக்கற்றுக்கள் ஏற்றப்பட்டிருந்தது எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (செ-05)

## இளைஞர்களின் வாய்த் தர்க்கம் வாள் வெட்டில் முடிவடைந்தது

### முத்திரைச் சந்தியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

இளைஞர்களிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம், வாள் வெட்டில் முடிவடைந்த சம்பவம் முத்திரைச் சந்தியில் இடம்பெற்றது.

அப்பகுதியைச் சேர்ந்த கோபாலசிங்கம் கோகுலன் (வயது 25) என்பவரே இவ் வாள் வெட்டில் தலையில் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கல்வியங்காடுப் பகுதியில் இளைஞர் குழுவொன்று வாள், சத்தி, பொல்லுகள் சகிதம் திரிவதாக பத்திரிகைகளில் ஏற்கனவே செய்தி வெளியாகியமை குறிப்பிடத்தக்கது. (உ)

## பெண்ணைக் காப்பாற்ற இரத்ததானம் செய்த நபர்

(மந்திகை)

உயிருக்கு போராடிய இளம் குடும்பப் பெண்ணை தனது இரத்தத்தை தானம் செய்து காப்பாற்றினாராம் சிகிச்சை பெற வந்தவர். மந்திகை மருத்துவ மனையில் இடம்பெற்ற மேற்படி சம்பவம்பற்றி தெரியவருவதாவது.

அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த இளம் பெண் ஒருவருக்கு அவசரமாக இரத்தம் தேவைப்பட்டது.

உடனடியாக அவருக்கு வேண்டிய இரத்தத்தை பெற்றுக் கொள்ள முடியாது திண்டாடிய வேளையில் அங்கு நோய் காரணமாக சிகிச்சை பெற வந்திருந்த கரணவாய் வடக்கைச் சேர்ந்த எஸ். கௌரிசங்கர் என்பவர் இரத்தம் வழங்க முன் வந்தார் இதனால் அவ் இளம் பெண்ணுக்கு நேரவிருந்த அபாயம் தவிர்க்கப்பட்டது.

சம்பந்தப்பட்டவரின் ஆபத்தில் உதவும் நற்பண்பினை வைத்தியசாலை வட்டாரங்களும் எம். எஸ். எவ். நிறுவனத்தினரும் பாராட்டியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது (உ-23)

## யாழ்.மாநகர தீயணைப்பு சேவை மீண்டும் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபையின் தீயணைப்புப்பிரிவு மீண்டும் தனது 24 மணிநேர சேவையை ஆரம்பித்துள்ளது.

பலமாதங்களாக செயலிழந்திருந்த இப்பிரிவு அண்மையில் மீண்டும் இரவு-பகல் சேவையை தொடங்கியுள்ளது.

தீயணைக்கும் கருவிசெயல் இழந்ததைத்தொடர்ந்தேஇப் பணி மேற்கொள்வதில் தடங்கல் ஏற்பட்டன.

திருத்த வேலைகள் தற்போது பூர்த்தியடைந்ததை தொடர்ந்து இச்சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இச்சேவையை பெறவிரும்புவோர் 021-2275என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-12)

## கூட்டுப் பிரார்த்தனை

(யாழ்ப்பாணம்)

தொல்புரம் கொட்டடியம்பதிஆதிமுத்துமாரிஅம்மன் ஆலயத்தில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் மாலை 5.30 மணிக்கு பஜனை, கூட்டுப்பிரார்த்தனை வழிபாடுகள் இடம் பெற்று வருகின்றன.

நாட்டில் சாந்தியும் சமாதானமும் நிலவ, தொல்புரம் மத்திய சனசமூக நிலைய வாசிகசாலையின் ஏற்பாட்டில் இந்நிகழ்வு நடத்தப்படுகின்றது. (செ)

## அலுவலகம் திறப்பு

(நெடுந்தீவு)

நெடுந்தீவு சமுர்த்தி வலய அலுவலகம் அண்மையில் திறந்துவைக்கப்பட்டது. (உ - 82)

# இலங்கை பாராளுமன்ற வரலாற்றில்

# சாதனை படைக்கும் குடும்ப பிணைப்பு

**'டெய்லி நியூஸ்' ஆங்கில பத்திரிகையில்அண்மையில்பிரசுரமாகிய ஹிலாறி ராஜ கருணநாயக்காவின் இலங்கைபாராளுமன்ற வரலாற்றில் சாதனை படைக்கும் குடும்ப பிணைப்புகள் என்னும் தலைப்பிலான கட்டுரை வாசகர் நன்மைகருதி இங்கு பிரசுரமாகிறது. (ஆ-ர்)**

இலங்கையின் பாராளுமன்ற வரலாற்றில் உற்றாரும் உறவினரும் சபையை அலங்கரிப்பதென்பது ஒன்றும் புதுமையான நிகழ்வல்ல. கடந்த காலப் பாராளுமன்ற வரலாற்றைப் பார்க்கும் போது,இரக்த உறவுகள் கூட எதிரும் புதிருமாகவும், ஒரே அணியிலும், ஒவ்வொருபாராளுமன்றத்திலும் இடம் பெற்றமை கண்கூடு.

இந்த வகையில் 11 வது பராளுமன்றமும் அமைந்திருப்பது பலரது கவனத்தையும் ஈர்த்திருப்பது ஒன்றும் வியப்பல்ல

1948 ல் இலங்கையின் முதலாவது பாராளுமன்ற அமர்வின் போது, மறைந்த சட்டகலா நிதி கொல்வின ஆர். டீ. சில்வா இலங்கையின் ஐக்கிய தேசியக் கட்சியைக் குறிப்பிடுகையில், மாமன், மருமகன் கட்சியென Uncle Nephew Party-U. N. P என லாவகமாகக் கூறினார்.

எங்கள் நாட்டின் முதலாவது பிரதமர் டீ: எஸ் சேனநாயக்காவினதும்,எங்கள்முதலாவது போக்கு வரத்து, பொது வேலை அமைச்சரான சேர் ஜோன்கொத்தலாவலையினதும் உறவு நிலையைக் கருத்திற்கொண்டே இவ்வாறு சொன்னார்.

அன்று தொடக்கம் இன்று வரைதொடர்ச்சியாக குடும்ப உறவுகள் பாராளுமன்றத்தை அலங்கரிப்பதென்பதுதொடர் வரலாறு ஆகும்.

டீ. எஸ். சேனநாயக்கவும் அவரது மகன் டட்லி சேனநாயக்காவும் ஏக காலத்தில் பாராளுமன்றத்திலும், மந்திரி சபையிலும் இடம் பெற்றனர்.அதன் பின்னர் தாயும் தனயனுமாக (மறைந்த உலகின் முதலாவது பெண் பிரதமர்)சிறிமாவோ பண்டாரநாயக்காவும் அனுரா பண்டாரநாயக்காவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து தெரிவு செய்யப்பட்டு அமர்ந்தனர்.

ஒருவரும் மறக்க முடியாத இன்னொரு கூட்டு ரி. பி இலங்கரட்ணாவும் அவரது பாரியார் தாமரா இலங்கரட்ணாவும்

அதே அவையில் லங்கா சமசமாஜக் கட்சி சார்பில் லெஸ்லி குணவர்த்தனாவும் அவர் மனைவி விலியன் குணவர்த்தனாவும் இடம் பெற்றனர். இத்தோடு நின்று விடாமல் கே. எம். பி இராஜரட்ணாவும், அவரது துணைவியார் குசுமாராஜரட்ணாவும் அமர்ந்தனர்தந்தை, தனயன், தாய், மகன், கணவன், மனைவி என்ற உறவுகளுடன் ஏக காலத்தில் மார்க்சிஸத்தில் புகழ் பூத்த பிலிப், றெபேட் சகோதரர்கள், டீ. ஏ.இராஜபக்ஸ,ஜோர்ச் இராஜபக்ஸ, லக்ஸ்மன் இராஜபக்ஸ ஆகிய சகோதரர்களும் பிரசன்னமாயிருந்தனர்.

## ஹிலாறி ராஜகருணநாயக்கா

இலங்கையின் பதினோராவது பாராளுமன்றக்கூட்டோ மிகவும் சுவாரசியமான உறவுகளின பிரசன்னங்களைக் கொண்டுள்ளதெனலாம். இரத்தினபுரி மாவட்டத்திலிருந்து தந்தையும் மகளுமாக மக்கள முன்னணியிலிருந்து தர்மதாஸ வன்னியாராச்சியும், பவித்திராவன்னியாராச்சியும் பிரசன்னமாகியுள்ளனர். அம்பாந்தோட்டை மாவட்டத்திலிருந்து சகோதரர்களான சாமல ராஜபக்ஸவும்,மகிந்தராஜபக்ஸவும் மக்கள் முன்னணியின் சார்பில் அங்கம்வகிக்கின்றார்கள். இரு சகோதரர்களான எம்.ஈ.பியைச் சேர்ந்தபிலிப் குணவர்த்தனாவும் எல். எஸ். பியைச் சேர்ந்த றொபேட் குணவர்த்தனாவும் பாராளுமன்றஎதிரணியில் பிரகாசித்தார்கள்.

அன்று மார்க்சிஸத்தின் தந்தையென வர்ணிக்கப்படும் பிலிப்குணவர்த்தனாவின் இரு மைந்தர்களான தினேஸ்குணவர்த்தனாவும் இந்திகா குணவர்த்தனாவும் இன்று மக்கள் முன்னணியில் அங்கம்வகிக்கின்றார்கள்.

ஆளும் கட்சியை விட்டு எதிர்க்கட்சியை நோக்கினாலும்,இங்கு கூட சில புதிய உறவுமுறைகளைக்காணலாம் கம்பஹா மாவட்டத்திலிருந்துமாமனாராகியகருஜெயசூரியாவும், நுவரெலியாவிலிருந்துமருகனாகியநவின்சேனநாயக்காவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் பதுளைமாவட்டத்திலிருந்து நெருங்கிய உறவினர்களாகிய உபாலி சமரவீரவும், ரவீந்திர சமரவீரவும், தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.காலி மாவட்டத்திலிருந்து மஹிந்தயாப்பா அபயவர்த்தனாவும், லக்ஸ்மன் யாப்பா அபயவர்த்தனாவும் முறையே ஆளும் கட்சியிலும் எதிர்க்கட்சியிலும் அங்கம் வகிக்கின்றனர் மாத்தளை மாவட்டத்திலிருந்து அலிக் அலுவிகாராவும்ரஞ்சித் அலுவிகாரவும்அங்கம் வகிக்கின்றன

# இராசி பலன்

12-11-2000
(ஐப்பசி 27, ஞாயிறு)
பிரதமை பி. இ2. 34 வரை
கார்த்திகை பி. இ4. 48 வரை
ராகுகாலம் 4. 37 - 6. 07
சுபநேரம் 9. 07 - 10 37
சித்தம், கார்த்திகை விரதம்

**மேடம்**
விவாதம், கௌரவக் குறைவு, பணக்கிலேசம், தன விரயம், காரியத் தாமதம்.

**இடபம்**
புதிய கற்பனை, புதிய பொருள் சேர்க்கை, காரிய அனுகூலம், உடல் ஆரோக்கியம்.

**மிதுனம்**
சுபச்செலவு, பிரயாணம், காரியத் தாமதம், பொருள் வரவு.

**கடகம்**
மகிழ்ச்சியான சம்பவம், நண்பர்கள் சந்திப்பு, சிறு வியாதி,கீர்த்தி.

**சிங்கம்**
முயற்சிகள் கைகூடும், அசமந்தம், அரச நன்மை, தொழில் அதிகாரம்.

**கன்னி**
பிரயாணம், உடல்உபாதை கட்டுப்படுதல், தேவையற்ற செலவு.

**துலாம்**
உறவினர் வெறுப்பு, முயற்சி தாமதம், வியாதி, பிரயாணத்தடை.

**விருச்சிகம்**
உணவுப் பிரியம், பிரயாணம், வாகன வசதி, மதிக்கப்படுதல்.

**தனுசு**
சத்துரு ஜெயம், முயற்சி வெற்றி, மனச் சந்தோசம், நன்மை விருத்தி.

**மகரம்**
புத்திரரால் கவலை, பிரயாணத் தடங்கல், காரிய ஜெயம்.

**கும்பம்**
கல்விச் சிறப்பு நிலை மாற்றம், உறவினர் மனஸ்தாபம், ரோகம்.

**மீனம்**
சகோதரர் உதவி, தன வரவு, பிரயாணம், காரியம் கைகூடும்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

**வளவன்**

# கொழும்பில்கலந்துரையாடல் பாடவிதானம் பற்றியதாம்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் காலங்களில் பாடசாலைகளில் அமுல்படுத்தப்படவுள்ள நிர்வாக, பாடவிதான ஒழுங்கு சம்பந்தமான கலந்துரையாடல் கடந்தவாரம் கல்வி அமைச்சில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் 14 மாவட்டங்களையும் சேர்ந்த தேசிய பாடசாலைகளின் அதிபர்கள் கலந்து கொண்டனர்.

மேற்படி கலந்துரையாடலில் உலக வங்கி திட்டத்திற்கமைய திட்டமிடப்பட்டுள்ள நிர்வாக மாற்றங்கள் சம்பந்தமான செயற்பாடுபற்றி ஆராயப்பட்டது. இதன்படி பாடசாலைகளை தரம் 1 தொடக்கம் தரம் 9 வரை ஒரு பிரிவாக ஒரு அதிபருக்கு கீழேயும் தரம் 10 முதல் தரம் 13 வரைவேறு ஒரு அதிபரின் கீழும் இயங்கச் செய்யும் வகையிலும், தேசிய பாடசாலைகளை பொறுத்தவரையில் இவ்வாறு பிரிக்கப்படும் பொழுது இணைப்பாளராக இரண்டு பாடசாலைகளையும் மேற்பார்வை செய்யும் அதிபர் ஒருவரை நியமிப்பது சம்பந்தமாக ஆராயப்பட்டது.

றோயல் கல்லூரி, நாலந்தாகல்லூரி, பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி போன்றவை இவ்வாறான இணைப்பு அதிபர்களைக் கொண்டதாக இருக்க வேண்டுமென கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன.

ஏனையமாவட்டம் சம்பந்தமாக அவ்வவ் பகுதி மாகாண கல்விப்பணிப்பாளரின் ஆலோசனையுடன் செயற்படுத்த வேண்டுமென எடுத்துரைக்கப்பட்டது.

முன்னைய அமைச்சரால் திட்டமிடப்பட்டதும் உலக வங்கியால் நிதியளிக்க ஒப்புக் கொள்ளப்பட்டதுமான சகல செயற் திட்டங்களும் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படுமெனவும் கூறப்பட்டது.

பாடசாலைகளில் பாடவிதானம் எவ்விதமான மாற்றமின்றி தொடரப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-3)

# கட்டிய கணவனை தீ மூட்டி கொன்ற கிராதகி

## கிருலப்பனையில் சம்பவம்

(கொழும்பு)

கட்டிய கணவனைகோடரி கொண்டு தாக்கி.தீ மூட்டி கொன்றாளாம்கிராதகி ஒருத்தி.

கிருலப்பனையில் அண்மையில் இடம் பெற்ற இந்த கொடுமையான சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:

மனமொப்பித் திருமணம் முடித்த கணவன் மனைவிக்கிடையில் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகளால் சிலகாலமாக வாய்த்தர்க்கம் இடம் பெற்று வருவது வழமையான நிகழ்வானது.

சம்பவ தினத்தன்றும் வழமை போன்று வாய்த்தர்க்கம் ஏற்பட்ட வேளையில், கடும் கோபம் கொண்ட 24 வயதேயானமனையாள் கணவனின் தலையில் கோடரி கொண்டு பலமாகத் தாக்கினாள்.

இதனால் மயக்கமடைந்த கணவனின் உடலில் மண்ணெண்ணெயை ஊற்றித் தீ மூட்டிக் கொன்றதுடன், தானும் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டவேளை அயலவர் சென்று அக்கொலைகாரியை மீட்டனர்.

இச்சம்பவத்தை பிரஸ்தாப பெண்மணி மீது தீவிர புலன் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலிஸார் தரப்பில்தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

# பண்டாரவளைக் கொலை புதுச்சேரியில் கண்டனம்

(கொழும்பு)

பண்டாரவளை பிந்துனுவெவ நலன்புரிநிலையத்தில் இடம்பெற்ற இனப்படுகொலைகளைக் கண்டித்து கடந்த புதன்கிழமை புதுச்சேரியில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

புதுவை இலங்கைத் தமிழர்கள் கூட்டமைப்பின் சார்பில் இடம்பெற்ற இவ் ஆர்ப்பாட்டப் பேரணியில் பல்வேறு தமிழ் அமைப்புகளும் கலந்து கொண்டு தமது எதிர்ப்பை தெரிவித்தன

ஆர்ப்பாட்ட முடிவில் இடம்பெற்றகூட்டத்திற்கு தலைமை தாங்கிப் பேசிய தங்கப்பா தனதுரையில்,

பிஜியில் இடம்பெறும் வன்முறைகளை எதிர்த்துக் குரல் கொடுக்கும் இந்தியா, இலங்கைத் தமிழர்களுக்காகவும் குரல்கொடுக்கவேண்டும் என்ற கோரிக்கையினைவிடுத்தார். (உ)

# சிறுவர்கள் கலைவிழா

(யாழ்ப்பாணம்)

வலி. மேற்கு முன்பள்ளி ஆசிரியர் சங்கத்தினால் நடத்தப்படும் சிறுவர்களின் கலை விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு வட்டு.இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

வலி.மேற்கு முன்பள்ளி ஆசிரியர் சங்கத்தலைவி து. ஸ்ரீபாமா தலைமையில் நடைபெறும் இந் நிகழ்விற்கு,வலி. மேற்கு பிரதேசசபைத்தலைவர் ந.திரிலோகநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார். (செ- 24

## உயர் வகுப்பு மாணவிகளுக்கு கருத்தரங்கு

(புலோலி)

வருங்காலத்தில் சமயம், சமயத்தின் எதிர்காலம் என்ற தலைப்பிலான கருத்தரங்கொன்று கரவெட்டியில் இயங்கிவரும் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் உயர் வகுப்பு மாணவிகளுக்கு அண்மையில் நடத்தப்பட்டது.

பருத்தித்துறை ஸ்ரீஇராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமதலைவர் சுவாமி சித்ரூபானந்தா இந்நிகழ்வில் கருத்துரை வழங்கினார். (உ-52)

# சமாதான நீதவான்

(புலோலி)

பருத்தித்துறை கற்கோவளத்தைச் சேர்ந்த சரவணமுத்து தேவதாசன் நீதியமைச்சினால் யாழ். மாவட்ட சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் மல்லாகம் மாவட்ட நீதிபதி பா. சுப்பிரமணியம் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

யாழ் பல்கலைக்கழக மருத்துவபீட முதுநிலை பதவிநிலை உத்தியோகத்தரான இவர் சிறந்த சமய சமூகசேவையாளருமாவார். (உ-52,

# பிரிவுத்துயர் பகிர்வு

## திரு. நவரத்தினம் சண்முகராசா

(இளைப்பாறிய யாழ். தபாலக ஊழியர்)

அரியாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட நவரத்தினம் சண்முகராசா 09.11.2000 அன்று கொழும்பில் காலமானார்.

தகனக் கிரியைகள் இன்று பொரளை கனத்தை மயானத்தில் இடம்பெறும்.

தகவல் **மனைவி, மக்கள், சகோதரி**

## திரு. சண்முகநாதன் இராசநாதன்

சாவகச்சேரி கச்சாய் வீதியை பிறப்பிடமாகவும் கொழும்பு மாளிகாவத்தையில் வசித்துவந்தவருமான சண்முகநாதன் இராசநாதன் 09 11.2000 அன்று சிவபதமடைந்தார்.

தகனக்கிரியைகள் இன்று பொரளை கனத்தை மயானத்தில் நடைபெறும்.

தகவல் **க. நகுபராஜா** (சகலன்)

## செல்வன் வலன்ரைன் அன்ரன்

கரம்பனை பிறப்பிடமாகவும் நீர்கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட வலன்ரைன் அன்ரன் 7.11.2000 அன்று அகாலமரணமானார்.

இறுதிக்கிரியைகள் இன்று நீர்கொழும்பில் இடம் பெறும்.

தகவல்: **ஜேம்ஸ்** (மாமன்)

# கல்விப் பொதுத் தராதரப்பத்திர சாதாரணதர மாதிரிப் பரீட்சை - 2000

நேரம்:- 1 மணி

## தமிழ் மொழியும் இலக்கியமும்-1

தொகுப்பு: ந. ஆனந்தசபேசன்

நேற்றைய தொடர்ச்சி

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

**பொருத்தமான விடையைத் தெரிவு செய்க**

21) பாடு அடித்தான் இதிலுள்ள தொகை எது?
1) உம்மை 2) உவமை 3) வேற்றுமை 4) வினை

22) வயலும் வயல் சார்ந்த இடமும்
1) குறிஞ்சி 2) முல்லை 3) மருதம் 4) பாலை

23) கெடுதல் விகாரப் புணர்ச்சிக்கு உதாரணமாகக் கொள்ளத் தக்கது
1) கற்குளை 2) பரவேர் 3) பூங்கொடி 4) கண்மணி

24) மாலதி குளிரினால் நனி வருந்தினாள். இதில் வந்துள்ள சொற்களின் வகையில் ஒழுங்கானது
1) பெயர், உரி, இடை, வினை 2) உரி, வினை, இடை, பெயர்
3) பெயர், இடை, உரி, வினை 4) இடை, பெயர், வினை, உரி

25) கற்றான் என்னும் சொல்லில் காலம் காட்டும் உறுப்பு
1) கல் 2) ற் 3) ஆன் 4) இன்

26) ஆண்பாலுக்கும் பெண்பாலுக்கும் பொதுவாக வழங்கும் சொல்
1) நிரபராதி 2) புலவன் 3) பாணன் 4) இரவலன்

27) சாரைப் பாம்பு புற்றினுள் சென்றது. இதில் சாரைப்பாம்பு என்பது
1) அன்மொழித் தொகை 2) பண்புத்தொகை
3) உவமைத்தொகை 4) இருபெயரொட்டு பண்புத்தொகை

28) பின்வருனவற்றுள் பெயர் பயனிலை கொண்டு முடிந்த வாக்கியம்
1) கம்பர் இராமாயணம் பாடினார் 2) என் அழகுதான் என்னே!
3) இராமன் உடைத்த வில் 4) நீ நாளை வா

29) மொழி முதலும் இறுதியிலும் வரத்தக்க வினாவெழுத்து
1) ஆ 2) யா 3) ஓ 4) ஏ

30) மென் தொடர் குற்றியலுகரச் சொல்லாக வராதது
1) சங்கு 2) வண்டு 3) பட்டு 4) பந்து

**பின்வரும் வாக்கியங்களின் முற்பகுதிக்கு மிகப் பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவு செய்க.**

31) சோலையிலே பல வகைப்பறவைக் கூட்டம்
1) ஒலி செய்தன 2) ஒலி செய்தது
3) ஒலி செய்யப்பட்டது 4) ஒலிசெய்யப்பட்டன

32) காட்டிற் கண்ட மயில்களின் கூட்டம்
1) அழகுடையனவாய் இருந்தன 2) அழகுடையனவாய் இருந்தது
3) அழகுடையதாய் இருந்தன 4) அழகுடையதாய் இருந்தது

33) அங்கே நிற்கும் குழந்தைகள்
1) அவர்களுடையதல்ல 2) அவர்களுடையனவல்ல
3) அவர்களுடையதன்று 4) அவர்களுடையனவல்லர்

34) தகுந்த பருவம் வந்தால் அன்றிப் பழங்கள்
1) பழா 2) பழுக்கும் 3) பழுக்காது 4) பழாது

35) நீயா, அவனா, யார் இவ்வேலையைச்
1) செய்தாய் 2) செய்தது 3) செய்தார் 4) செய்தோம்

**பின்வரும் செய்யுள்களைப் படித்து அதன்கீழுள்ள வினாக்களுக்குரிய பொருத்தமானவிடையைத் தெரிவு செய்க.**

"பொங்கியும் பொலிந்தும் நீண்ட புதுப்பிடர் மயிர் சிலிர்க்கும்
சிங்கமே! வானவீதி திருதிரு வென எரிக்கும்
மங்காத தணற்பிழம்பே! மாணிக்கக் குன்றே! தீர்ந்த
தங்கத்தின்! தட்டே வானத் தகளியிற் பெருவிளக்கே!

36) இப்பாடலின் மையப் பொருளாய் அமைவது
1) சந்திரன் 2) விண்மீன் 3) பெருவிளக்கு 4) சூரியன்

37) மையப்பொருள் இதுதான் எனத் துணிவதற்குரிய தொடர்
1) பிடர் மயிர் சிலிக்கும் சிங்கம்
2) திருதிருவென எரிக்கும் மங்காத தணற்பிழம்பு
3) மாணிக்கக்குன்று 4) தங்கத்தின் தட்டு

38) இப்பாடலில் இடம்பெறும் பொருளணி ஏதுவாயிருக்கலாம்?
1) உயர்வு நவிற்சியணி 2) உருவகவணி
3) உவமையணி 4) தற்குறிப் பேற்ற அணி

39) பின்வருவனவற்றில் எந்தச் சுவை இப்பாடலைப் படிக்கும் போது உமது மனத்தில் மிக்கு நிற்கிறது?
1) வெகுளி 2) சாந்தம் 3) பெருமிதம் 4) வியப்பு

40) கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் கிடக்கின்றன. அவற்றை ஒழுங்கு படுத்தினால் கட்டுக் கோப்பான பந்தியொன்று அமையும் வைப்பு முறையைத் தெரிவு செய்க.
அ) ஏனெனில், இத்தொழிலுக்குத் தேவையான மூலப்பொருட்கள் அக்கிராமங்களிலேதான் காணப்படுகின்றன.
ஆ) தலைமுறை தலைமுறையாக நடைபெற்றுவரும் இத்தொழில்களிலே அவர்கள் தக்க திறமையும் பெற்றிருக்கின்றனர்.
இ) ஓய்வான நேரங்களில் பற்பல குடிசைக் கைத்தொழில்களில் ஈடுபடும் மக்களைக் கிராமங்களிலேயேதான் காணலாம்.
ஈ) ஆகவேதான் அவர்களது ஆக்கப் பொருள்கள் கவர்ச்சியானவையாகவும் நீண்ட காலப் பாவனைக்கு ஏற்றவையாகவும் காணப்படுகின்றன.
உ) இத்தொழில்கள் அவர்களுக்குப் பொழுதுபோக்காக மட்டுமன்றிப் பொருளாதார நிறைவுக்கும் உதவுகின்றன.
1) இ, உ, ஈ, அ, ஆ 2) இ, அ, உ, ஆ, ஈ
3) ஆ, அ, உ, இ, ஈ 4) உ, ஆ, இ, அ, ஈ

## பிஸ்ரல் மீளப்பெறப்பட்டது நகரசபைதலைவர் அதிருப்தி

[யாழ்ப்பாணம்]

வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவர் என்றமுறையில் எனது பாதுகாப்பிற்காக வழங்கப்பட்ட கைத்துப்பாக்கி இராணுவத்தினரால் மீளப்பெறப்பட்டமை குறித்து அப் பிரதேசசபை தலைவர் சிவாஜிலிங்கம் அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்; கடந்த 9ஆம் திகதி யாழ். நகரில் உள்ள 512 வது பிரிகேட்டுக்கு வருமாறு அழைக்கப்பட்டு, அங்கிருந்து இராணுவத்தினரால் பலாலி இராணுவ தலைமையகத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு மூன்று மணிநேரம் நடைபெற்ற விசாரணையின் போது கொழும்பில் இருந்து வந்த இராணுவத் தளபதியின் விசேட உத்தரவையடுத்தே மேற்படி நடவடிக்கைமேற் கொள்ளப்பட்டதென படையினர்தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள் மேற்படி பாதுகாப்பை இரண்டு வருடங்களுக்கு முன்னர் பெற்றுக் கொண்ட பொழுதிலும், கடந்த வருடம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் ஜனநாயகத்திற்கு திரும்பிய கட்சி ஒன்றினால்ஏற்படுத்தப்பட்ட நிலையினால் இந்தப் பாதுகாப்பை பெற்றுக் கொண்டேன்.

இதனை விட ஏனைய உள்ளூராட்சிமன்றதலைவர்களில் பெரும்பாலாருக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது. பொலிஸ் பாதுகாப்பையும் நான் பெறவில்லை.

ரெலோ இயக்கத்தின் அரசியல் நிலைப்பாடு நாடாளுமன்றத் திறப்பு விழாவின் போது தமிழ் பேசும்பாராளுமன்ற உறுப்பினர்கள் சபைக்குள் ஆர்ப்பாட்டம் செய்ய வேண்டும் என்ற வல்வெட்டித்துறை நகரசபையின் தீர்மானம் போன்றவற்றின் அரசாங்கத்தில் பழிவாங்கும் நடவடிக்கையே இச் செயல் எனக் குறிப்பிட விரும்புகிறேன்.

நாடாளுமன்ற திறப்பு விழா நடைபெற்ற தினம் இந்த நாடகமும் அரங்கேற்றப்பட்டுள்ளது குறிப்பிடத் தக்கது (க)

## வடமராட்சியில் சட்ட விரோதமாக மின்சாரபாவனை

(மந்திகை)

கரவெட்டி, துன்னாலை, உடுப்பிட்டி, கரணவாய், அல்வாய் ஆகிய பகுதிகளில் சட்ட விரோத மின்பாவனை அதிகரித்துள்ளது.

இச் சட்டவிரோத மின்பாவனைகுறித்து பொதுமக்களால் அடிக்கடி மின்சாரசபையினருக்கு முறைப்பாடு செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப் படுகின்றது.

இவ்வாறு சட்டவிரோதமாக மின்சாரம் பெறுபவர்களின் மின்இணைப்புக்கள், மின்சாரசபை ஊழியர்களால் கண்டுபிடிக்கப்பட்டு துண்டிக்கப்பட்டபோதும், மீண்டும் இவ்வாறு சட்டவிரோத மின் பாவனை அதிகரித்துள்ளது.

இக் காரணத்தினாலேயே நிரந்தர மின்பாவனையாளர்கள் முழுமையான மின்சாரத்தினை பெறமுடியாதுள்ளதாகவும், அடிக்கடி மின் துண்டிப்பு ஏற்படுவதாகவும் மின்சாரசபை உயர்அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

(செ-23)

## கணவனால் தாக்குண்ட மனைவி மரணம்

(கொழும்பு)

நான்கு பிள்ளைகளின் தாய் கணவனால் அடித்துக்கொல்லப்பட்டுள்ள கோரச் சம்பவம் அக்கரைப்பற்றில் நிகழ்ந்துள்ளது.

கடந்த திங்கட்கிழமை இரவு நடந்த இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது;

இரவு வேளையில் மதுபோதையில் வீடு வந்த கணவனுக்கும் மனைவிக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கத்தை அடுத்து மனைவியை அடித்தபோதே இக் கோர மரணம் சம்பவித்துள்ளது. (செ)

## கொதிக்கும் தார் கையை பதம்பார்த்தது

(ஈச்சமோட்டை)

வீதியைச் செப்பனிடும் பணியில் ஈடுபட்டிருந்த வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஊழியர் ஒருவர் கையில் கொதிக்கும் தார் ஊற்றப்பட்டு படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி புலோலி வீதிக்கு தார் ஊற்றும்பணியில் ஈடுபட்டிருந்த வேளையிலேயே கொதி தார் அவருடைய கையைப்பதம் பார்த்ததாக தெரியவந்துள்ளது.

கப்பூதுவைச் சேர்ந்த 3பிள்ளைகளின் தந்தையான எஸ். தவராசா (வயது-38) என்பவரே கையில் படுகாயமடைந்தவராவார். (உ-59)

## தபாலக ஊழியர் சம்பளப் பணம் கொள்ளை

(கொழும்பு)

தபால் ஊழியர்களின் 4அரைஇலட்சம்ரூபா சம்பளப் பணம் ஆயுததாரிகளால் கொள்ளையிடப்பட்டுள்ளது.

தங்காலை பொலிஸ் பிரிவைச் சேர்ந்த தபாலகம் ஒன்றின் ஊழியர்களின் சம்பளப் பணமான 4 அரை இலட்சம் ரூபாவினைவலஸ்முல்லை வங்கியில்இருந்து. ஆட்டோ மூலம் தபாலக உத்தியோகத்தர் எடுத்து வந்ததாகவும் ஆயுதங்கள் சகிதம் காரில் வந்த 4 பேர் கொண்ட இளைஞர் குழு அவர்களை மிரட்டி பணத்தை பறித்துச் சென்றுவிட்டதாகவும் தெரியவந்துள்ளது. (உ)

## கோப்பாயில் மிதிவெடி

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் தெற்கு, பழையவீதியில் இராணுவக் காவலரணை அண்மித்த பகுதியில் மிதிவெடியில் சிக்கி இளைஞர் ஒருவர் இருகால்களிலும்படுகாயமடைந்தநிலையில் யாழ். போதனாவைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இருபாலையிலிருந்து இடம் பெயர்ந்து கோண்டாவிலில் வசித்துவரும் நல்லதம்பி சந்திரன் (வயது-21) என்பவரே இவ்வாறு காயமடைந்தவராவார். (2-ஶ்ரீ12)

## இன்று ஒரு தகவல்

# ரால்ஃப்வால்டோஎமர்ஸன்

வறட்டுத் தனமாக இல்லாமல் தமது வளமான தத்துவங்களுக்குப் பெயர் போன எமர்ஸன் ஓர் அமெரிக்கர், கதாசிரியர், கவிஞர், கட்டுரையாளர், தத்துவஞானி, புதுமைகளின் காதலர், வாழ்க்கையில் புதுப்புதுக் கோணங்களைக் கண்டறியும் ஆர்வலர்.

நல்ல சிந்தனைகளைக் கருவிகளாகக் கொண்டு மனிதன் இந்த உலகைத் தன் தேவைக்கேற்ப மாற்றிக்கொள்ள முடியும் என்று நம்பியவர் எமர்ஸன்.

அடிமைத் தனம், இனவெறியை அறவே வெறுத்தவர். விடுதலை விரும்பி ஆர்வம் இல்லாமல் எந்தப்பெரிய சாதனையும் எப்போதும் செய்து முடிக்கப்பட்டதில்லை.

''எளிமையான ஒருவன், நேர்மையுடன் இறைவனை வழிபடும்போது, அவனே கடவுள் ஆகிவிடுகின்றான்''

''புத்திசாலிகளுக்கு வாழ்க்கை ஒரு திருவிழா''

'நற்குணமென்பது வெற்றி கிட்டாவிட்டால் கூட வாழ்ந்திருக்கக் கூடிய ஒன்று'

''அச்சத்துக்கு மாற்றுதான் அறிவு''

''நல்ல பெண்மணிகளின் சக்திதான் நாகரிகம்''

இவையெல்லாம் எமர்ஸனின் சிந்தனைச் சிதறல்களில் சில,

''கடவுளிடம் உங்கள் பிரார்த்தனை என்ன?'' என்று ஒருவர் எமர்ஸனைக் கேட்டார்.

''தினமும் காலையில் பசும் புல்வெளிகளின் மீதும், சின்னச் சின்னப் பறவைகளின் மீதும் நான் கண்விழிக்கும் போது - இந்த அழகிய உலகம் என் கண்களில் விரியும் போது, -'இன்று என்னை உயிரோடு கண்விழிக்க வைத்ததற்கு நன்றி இறைவா! என்பதுதான் என் பிரார்த்தனை' என்றார் எமர்ஸன்.

வி.கே. சுப்பிரமணியன்

### குருநகர் கடற்றொழிலாளரின்

# மீனவ அடையாள அட்டைகளை மீளப் பெற்றுத் தரவும்

## அமைச்சர் டக்ளஸிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

குடாக் கடல் மீதான தடை நீக்கத்தையடுத்து கடந்த 7 ஆம் திகதி கடற்றொழிலிற்கு சென்ற போது கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்ட 48 பேரின் மீனவ அடையாள அட்டைகள், மற்றும் 06 வள்ளங்களை உடன் மீட்டுத் தருமாறு தங்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

மேற் கண்டவாறு குருநகர் கடற்றொழிலாளர் அபிவிருத்திச் சங்கத்தினர் ஈ.பி.டி.பி செயலரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவிற்கு அனுப்பிய மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம் மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

அன்றைய தினம் தொழில் செய்து விட்டுத் திரும்பிய 98 பேரின் மீனவ அனுமதி அட்டைகளும் படையினரால் அபகரிக்கப்பட்டமையும் இங்கு சுட்டிக் காட்டப்படத்தக்கது.

குருநகர் கடற்தொழில் அபிவிருத்திச் சங்க செயலர் யூ. சகாயராஜா மேற்படி மகஜரில் ஒப்பமிட்டுள்ளார். (க-03)

### திருட்டுப்பணத்தை

## பங்கு போடுவதில் தகராறு வசமாகச் சிக்கிய கோஷ்டி

(புலோலி)

வரணி கறுக்காய் பகுதியில் பல திருட்டுக்களில் ஈடுபட்டு வந்த திருட்டுக்கோஷ்டியொன்று வசமாக பாதுகாப்புப் படையினரிடம்சிக்கிக் கொண்டது.

ஆடு, மாடுகள் திருட்டு, ஆட்களில்லாத வீடுகளில் கதவுகள், யன்னல்கள், ஓடுகள், திருட்டு களவாக மரம்தறித்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு இத்திருட்டுக் கோஷ்டியினர் பணம் சம்பாதித்து வந்தனராம்.

சம்பாதித்தபணத்தைப் பங்கு போடுவதில் இத்திருட்டுக்கோஷ்டியினரிடையே ஏற்பட்ட இழுபறியைத் தொடர்ந்து பாதுகாப்புப் படையினருக்குத் தகவல் கொடுக்கப்பட்டது இதனைத் தொடர்ந்து திருட்டுக் கோஷ்டியினர் பாதுகாப்புப் படையினரிடம் அகப்பட்டுக் கொண்டதுடன் பாதுகாப்புப் படையினர் திருட்டுப் பொருட்களையும் மீட்டனர்.

திருட்டுக்கோஷ்டியினர் பாதுகாப்புப் படையினரால் எச்சரிக்கப்பட்டனர். பொருட்கள் உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டன. (க-52)

### ★ பண்டாரவளைப் படுகொலை

## பொலிஸ் விசாரணையில் தமக்கு நம்பிக்கையில்லை

(கொழும்பு)

பண்டாரவளை பிந்துனுவெவ புனர்வாழ்வு படுகொலை தொடர்பான பொலிஸ் விசாரணைகளில் தமக்கு நம்பிக்கை இல்லையென மனித உரிமைகள் அபிவிருத்தி நிலையம் தெரிவித்துள்ளது.

அண்மையில் கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் இவ்வாறு தமது அதிருப்தியை வெளியிட்டார்.

மேற்படி நிலைய தலைவர் தெரிவிக்கையில்;

இப்படுகொலை தொடர்பான உயர்மட்ட விசாரணைகளுக்கு உத்தரவிட்டிருப்பதான அரசின் கூற்று வெளியுலகை ஏமாற்றும் நடவடிக்கை.

இச்சம்பவத்துக்கும் பொலிஸாருக்கும் இடையே நெருங்கிய தொடர்புகள் உண்டென்பது, இதில் பாதிக்கப்பட்ட பலரை நேரடியாகச் சந்தித்து வாக்கு மூலம் பெற்றபோது தெரியவந்துள்ளது.

இளைஞர் பலர் வெட்டுண்டும், சூடுபட்டும் புனர்வாழ்வு நிலையத்தில் கிடந்தபோது, கைகட்டிப் பார்த்து நின்ற பொலிஸாரின் விசாரணைகள் உண்மைத் தன்மையும் நடுநிலையும் கொண்டதாய் இருக்கும் என எவ்வாறு எதிர்பார்க்க முடியும் என அச் செய்தியாளர் மாநாட்டில் வினாவெழுப்பப்பட்டது. (உ)

## கொழும்பிலிருந்து வலைகள் தருவிக்கப்படவில்லை

### உற்பத்தி முயற்சி தாமதம்

(தென்மராட்சி)

குருநகரிலுள்ள சீநோர் வலை தயாரிப்பு நிலையத்துக்குத் தேவையான இரசாயன வலைகள் கொழும்பில் இருந்து தருவிக்கப்படாமையில் மீன்பிடி வலைகள் உற்பத்திப் பணிகள் இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லை எனத் தெரியவருகின்றது.

இத்தொழிற்சாலைக்குத் தேவையான இரசாயனப் பொருட்கள் கொழும்பில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சின் அனுமதிகிடைக்கப்பெற்றதும் கப்பல் மூலம் இங்கு கொண்டுவரப்படும் எனத்தெரியவருகின்றது. க77

### வீதி திருத்தம்

நீண்டகாலமாகத் திருத்தப்படாதிருந்த சாவகச்சேரி புலோலி வீதி, தற்போது திருத்தம் செய்யப்பட்டு வருகிறது. (உ-59)

## செய்தித் துளிகள்

### திருமுறை பாராயணம்

(நல்லூர்)

நாட்டில் அமைதி நிலவ வேண்டியும், மக்கள் மனதில் சாந்தியும் மனமகிழ்வு வேண்டியும் தினமும் பி. ப. 4.30 மணிக்கு அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினர், கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ள ஸ்ரீகாமாட்சியம்மாள் திருமடத்தில் திருமுறைப் பாராயண நிகழ்வை நடத்தி வருகின்றனர்.

தொடர்ந்து நாற்பது தினங்கள்நடைபெறவுள்ள இந்நிகழ்வில் கோளறு பதிகம், இடர்களை பதிகம் என்பவற்றுடன் மழை வேண்டியும் பதிகம் ஓதப்படுகின்றது எனத் தெரிவிக்கப்படுகின்றது. (செ-103)

### சமுர்த்தி செயலணி

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைஉதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட புளியங்கூடல் கிராம சேவகர் பிரிவின் சமுர்த்தி செயலணி அங்குரார்ப்பணக் கூட்டம் எதிர் வரும் 16ஆம் திகதி 10 மணிக்கு புளியங்கூடல் நெசவு நிலையமண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை இப்பகுதி சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஞா. செந்தமிழ்செல்வன் மேற்கொண்டு வருகின்றார். [உ-75]

### டைமன் கழகம் வெற்றி

(நெல்லியடி)

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரனையுடன்நடத்தப்பட்ட கொற்றாவத்தை றேஞ்சேஸ் விளையாட்டுக் கழகம் நடத்திய 07 பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியில் வதிரி டைமன்ஸ் விளையாட்டுக் கழகம் எதிர் வல்வெட்டி கர்னாகரன் விளையாட்டுக் கழகம் மோதியதில் நான்கிற்கு ஒன்று என்ற கோல்களை போட்டு டைமன் விளையாட்டுக் கழகம் கர்னாகரன் விளையாட்டுக் கழகத்தினை தோற்கடித்து தட்டிக் கொண்டது.

இந் நிகழ்விற்கு யாழ். மாவட்ட வலைபந்தாட்ட லீக்கின் தலைவர் சுப்டன் குணசிங்கம் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். (110)

### படுகொலை சூத்திரதாரி ஒருவர் கைது

(கொழும்பு)

பிந்துனுவெவ படுகொலையுடன் தொடர்புடையவர் எனச் சந்தேகிக்கப்படும் ஒருவரை குற்றப்புலனாய்வு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஜயந்த என்ற பண்டாரவளையைச் சேர்ந்த வாகன சாரதியே கைது செய்யப்பட்டவராவார்.

பிந்துனுவெவவில் இனத்துவேஷம் மிக்க துண்டுப்பிரசுரங்களை விநியோகித்ததாகவும் அவ்வாறான சுவரொட்டிகளை ஒட்டியதாகவும்இவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (உ)

### தபாலதிபர்கள் பதவியுயர்வு

(கந்தர்மடம்)

யாழ். மாவட்டத்தின் தபாலகங்களில் கடமையாற்றி வந்த 2 ஆம் தர தபாலதிபர்கள் ஒன்பது பேர் கடந்த ஆகஸ்ட் மாதம்முதலாம்திகதியிலிருந்து முதலாந்தர தபாலதிபர்களாக பதவியுயர்த்தப்பட்டுள்ளனர்.

இவ் வொன்பது பேரும் மிக விரைவில் யாழ்ப்பாணத்திலுள்ள தபாலகங்களுக்கு அஞ்சலதிபர்களாக நியமனம்பெறுவார்களென எதிர்பார்க்கப்படுகிறது. (ஸ்ரீ-37)

### திட்டப்பணிப்பாளருக்கு அழைப்பாணை

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலக களஞ்சிய திருட்டு தொடர்பாக நாளை 13 ஆம் திகதி யாழ். நீதிவான் நீதிமன்றில்ஆஜராகுமாறு திட்டமிடல் பணிப்பாளர் செ. மகாலிங்கத்திற்கு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளதாக நீதி மன்றவட்டாரங்கள் தெரிவித்துள்ளன: (க)

### பாலர் பாடசாலை திறப்பு

(மானிப்பாய்)

சாவல்காட்டு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினால் 5 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட பாலர் பாடசாலை கட்டடம் கடந்த வியாழனன்று திறந்துவைக்கப்பட்டது: (உ-120)

# கொழும்பில் பரவும் டெங்குக்காய்ச்சல் டிசம்பர்வரை தொடருமாம்

(கொழும்பு)

பருவப் பெயர்ச்சி மழை ஆரம்பித்ததைத் தொடர்ந்து கொழும்பு, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் தீவிரமாகப் பரவிய டெங்குக்காய்ச்சல் எதிர்வரும் டிசம்பர் மாதம் வரை தொடரும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மலத்தியோன் தெளிப்பதன் மூலம் டெங்குக் காய்ச்சலை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரமுடியாது என்றும், நுளம்புகள் பரவுவதை தடுப்பதன் மூலமே இதனைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியும்என்றும்அவ் அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

90 வீதமான நுளம்புகள் வீட்டுச் சுற்றாடலிலேயே உற்பத்தியாகின்றது. எனவே வீட்டையும் அதனைச்சுற்றியுமுள்ள பகுதிகளைத் துப்பரவாக வைத்திருப்பதன் மூலம் நுளம்புப்பெருக்கத்தைகட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியும்.

கொழும்பு, மட்டக்களப்பு ஆகிய பகுதிகளில் பலர் இக் காய்ச்சலால் பலியாகியுள்ளனர். இதன் காரணமாக டெங்குக் காய்ச்சல் விழிப்புணர்வு நடவடிக்கையில் இப்பகுதி சுகாதாரப் பகுதியினர் ஈடுபட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

அத்துடன் தொற்று நோய் பரவுவதைத் தடுப்பதற்காக தேசிய குழுவொன்றை அமைப்பதற்கு அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற அமைச்சரவைக் கூட்டத்தில் கோரவுள்ளதாக சுகாதார அமைச்சர் செனவிரத்ன கூறியுள்ளார். (செ)

### யாழ்ப்பாணம்-கொழும்பு

## விமான சேவை இன்னும் 10 தினங்களில் ஆரம்பம்?

(கொழும்பு)

யாழ்ப்பாணத்திற்கான விமான சேவை ஆரம்பிக்கப்படவுள்ளதால் விமானத்தில் பயணஞ் செய்யவுள்ளோர் யாழ். பொலிஸ் நிலையத்தில் பதிவுகளை மேற்கொளுமாறு விமானப் படையினர் அறிவித்துள்ளனர்.

இன்னும் பத்துத்தினங்களில் ஆரம்பிக்கப்படவுள்ள யாழ். விமான சேவைக்காக இரண்டு அன்ரனோவ் ரக விமானங்கள் தருவிக்கப்படவுள்ளதாகவும்தெரிவிக்கப்படுகின்றது.

ஆரம்பத்தில் ஒரு விமானம், மாத்திரமே சேவையில் ஈடுபடுத்தப்படும் எனவும், தினமும் இரண்டு தடவைகள் சேவையில் ஈடுபடும் எனவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்பணத்திலிருந்து பயணஞ் செய்வோர் யாழ். சிவில் நிர்வாகக்காரியாலயத்திலும், கொழும்பிலிருந்து பயணஞ் செய்வோர் இரத்மலானையிலுள்ள ஹெலிடூர்ஸ் அலுவலகத்திலும் பயணச் சீட்டைப் பெற்றுக் கொள்ளமுடியும். (செ)

### வீதி சீரில்லை

(கல்வயல்)

வண்ணார்பண்ணை மேற்கு முருகமூர்த்தி வீதி திருத்தஞ் செய்யப்படாது சேதமடைந்து காணப்படுகின்றது.

இதனால் இவ் வீதியால் பயணஞ் செய்வோர் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர். (செ-111)

# இந்தோனேசியாவில் தொடரும் மதக் கலவரம்

## இலட்சக்கணக்கானோர் இடம் பெயர்வு

(ஜகார்த்தா)

இந்தோனேசியாவில் தொடரும் மதக்கலவரங்கள் மற்றும் இயற்கை அனர்த்தங்களால் இலட்சக்கணக்கானோர் இடம்பெயர்ந்துள்ளதாக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்; இந்தோனேசியாவில் இனங்களுக்கிடையிலான பிரச்சினைகளாலும் தீவிரவாதிகளின் வன்முறைக் கொலைகளினாலும், இயற்கைச் சீற்ற அழிவுகளாலும் மக்கள் வீடு வாசல் உடமைகளை விட்டு இடம் பெயர்ந்து அகதிகளாகச் சுத்தூரத் தீவுகளில் ஒதுங்கியிருக்கிறார்கள் என்று சமூக சேவைகள் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மேலும் கிறிஸ்தவ இஸ்லாமிய சண்டைகளால் பலநூற்றுக்கணக்கானோர் இறந்துள்ளார்கள். ஒரு இலட்சம் பேர் இடம் பெயர்ந்துள்ளார்கள்.

இதேவேளை இது தொடர்பாக மலேசியா மற்றும் நாடுகளுக்கும்தஞ்சம் கோரிச்சென்றுள்ளார்களென்றும் அவர் தெரிவித்தார்,

இத்தகவல் சார்ந்த புள்ளி விபரங்கள் இந்தோனேசிய பராளு மன்றத்திலும் வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-து)

## ஐந்துபேர் வெட்டிக் கொலை

(பட்னா)

பிஹார் மாநிலத்தில் இனந்தெரியாத தீவிரவாதிகளால் ஐந்து பேர் கொடூரமாக வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

கொலை செய்யப்பட்டவர்கள் மாக்ஸீஸ் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆதரவாளர்களென்று தெரிவிக்கப்படுகிறது.

பீஹார் நலந்தா என்ற இடத்தில் இந்த கொடூரக் கொலைகள் நடந்திருக்கின்றன. (து)

## பிலிப்பைன்சில் மண் சரிவு பதினொருபேர் பரிதாப மரணம்

(மணிலா)

பிலிப்பைன்ஸ் நாட்டில் ஏற்பட்ட மண்சரிவினால் பதினொரு பள்ளிச் சிறுவர்கள் புதையுண்டனர் மூன்று பேருக்கு காயம் ஏற்பட்டுள்ளது

பிலிப்பைன்ஸின் ஒதுக்குப்புறமான, மலைப்பிரதேசக்கப்ய வு அபயாவு பகுதியில் மலை அடிவாரத்தில் ஏற்பட்ட மண்சரிவினால் பதினொரு பள்ளிச் சிறுவர்கள் உயிருடன் புதையுண்டு போயினர். மூன்று சிறுவர்கள் காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை பதினொரு சிறுவர்களைக் காணவில்லையென்றும் ஊர்வாசிகள் தெரிவித்தனர்.

இந்தமண்சரிவினால் பல வீடுகள் பலத்த சேதத்திற்குள்ளாகியிருக்கின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

மீட்புப் பணிதொடர்கின்றன என்றும் காணாமல் போன சிறுவர்களை தேடும் முயற்சியில் பொலிஸாரும் மற்றும் பொது அமைப்புகளும் ஈடுபட்டுள்ளன. (து)

## ★ பலஸ்தீன உள்ளூர் தலைவர் கொலை பழிக்குப்பழி வாங்குவோம் இஸ்ரேலுக்கு எச்சரிக்கை

(ஜெருசலேம்)

பலஸ்தீனத்தலைவர் ஜஸீர் அரபாத்தின் பாட்டா பிரிவின் உள்ளூர் தலைவர் ஒருவர் காஸா நிலப்பகுதியில் இடம் பெற்ற இஸ்ரேலின் உலங்கு வானூர்தித் தாக்குதலில் கொல்லப்பட்டார்.

இச்சம்பவத்தில் இரு பெண்கள் பலியாகியிருப்பதுடன் 7 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இதேசமயம், தமதுஉள்ளூர் தலைவர் கொல்லப்பட்டதற்கு பழிக்குப்பழி வாங்காமல் விடப்போவதில்லை என பலஸ்தீன பாட்டா பிரிவு சூளுரைத்திருப்பதாய் தெரிய வந்துள்ளது. (உ)

## சீனாவுக்கு எதிராக வர்த்தகப் போட்டியில் ஆசியன்

(சிங்கப்பூர்)

ஆசியன் நாடுகள் சீனாவுடன் வர்த்தகப் போட்டியில் இறங்க வேண்டிய தேவை வந்துள்ளதாக சிங்கப்பூர் வர்த்தக மந்திரி தெரிவித்துள்ளார்.

சீனா அமெரிக்காவுடன் வர்த்தக உறவைத்தொடங்கியுள்ளது. அதேவேளைஐரோப்பிய நாடுகளுடனும் வர்த்தகத்தை விஸ்தரிக்கத் தொடங்கியுள்ளது. இதேவேளை ஆசியாவிலும் பரந்துபட்ட வர்த்தக உறவுகள் வளர்கிறது. இதனால் ஆசியன் அங்க நாடுகள் விழிப்புடன் இருக்கவேண்டியுள்ளது என்று சிங்கப்பூர் வர்த்தக அமைச்சர் ஜோயூ தெரிவித்தார்.

அவர் மேலும் தொடர்கையில்; ஆசியன் நாடுகள் வர்த்தகத்தில் பலநாடுகளுடனும் தொடர்பு வைத்துக் கொள்ள வேண்டும் என்றும் குறிப்பிட்டார். (து)

## 86 பேருக்கு மரணதண்டனை வியட்நாமில் சம்பவம்

(கனோய்)

வியட்நாமில் இவ்வாண்டு எண்பத்தாறு மரண தண்டனைகளும். எண்பத்தேழு ஆயுள் தண்டனைகளும் விதிக்கப்பட்டுள்ளதாக குற்றவியல் துறை அறிக்கை தெரிவித்துள்ளது.

இவ்வாண்டு முதல் நான்கு மாதங்களில் இந்தத் தண்டனைகள் வியட்நாம் நீதிமன்றங்களினால் விதிக்கப்பட்டுள்ளன என்றும் அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அங்குஅநேகமாக போதைப் பொருள் கடத்தல்,போதைப் பொருள் உற்பத்தி, இழிவான தொழில்கள் செய்தல், இலஞ்ச மோசடிகள், மற்றும் பொருட்களில் மோசடிகள், என்றதன் பேரில் இந்த வருடத்தில் பத்தாயிரம் பேர் குற்றவாளிகளாகக் காணப்பட்டு சிறையில் தள்ளப்பட்டிருக்கிறார்கள் என்று கூறப்பட்டுள்ளது.

இங்கே ஐந்து கிலோ அபின் கஞ்சா போன்றவைகளுடனோ இருநூற்றி ஐம்பது கிராம் போதைவஸ்துடனோ ஒருவர் பிடிபட்டால் வியட்நாம்சட்டம்மரணதண்டனை விதிக்கச் சொல்கிறது என்று தொடர்கிறது.

இதேவேளை உலகில் போதைவஸ்து குற்றவியல் கூடிய இருபத்திநான்கு நாடுகளில் வியட்நாமும் அடங்குவதாக அமெரிக்க ஜனாதிபதி பில் கிளிங்டன் உரையில் குற்றம் சாட்டியுள்ளார். (து)

உலக தரிசனம்

## கண்ணாடி நூலகத்தில் தீ பிரான்சில் சம்பவம்

(பாரிஸ்)

பிரான்ஸில் நான்கு வருடங்களுக்குமுன் கட்டப்பட்ட கண்ணாடியிலான நூல்நிலையத்தில் தீப்பிடித்தது.

இந்த நூல் நிலயம் குளிர் சாதன அமைப்பில் ஏற்பட்ட கோளாறு காரணமாகச் சில நாட்கள் மூடப்பட்டிருந்தது.

குளிர் சாதனம் சீர் செய்த தன் பின் மக்களுக்காகத் திறந்துவிடப்பட்டது.

இதே வேளை அந்த நூல் நிலையத்தில் ஏதோவிஷவாயு பரவுவதாகவும் அங்கேயாரும் வாசிக்கவோ, வேலை செய்யவோ முடியாதென்றும் மூச்சுத் திணறுவதாகவும் தெரிவித்துக் கொண்டனர்.

ஆனால் அது திடீரென்று வெளியில் தீப்பிடித்துக் கொண்டது. தீயணைக்கப்பட்ட போதிலும் இவ்அனர்த்தத்திற்கான காரணத்தை அறிவதில் அரசு தீவிரமாக ஈடுபட்டு வருகின்றது.(து)

## ஜேர்மனியில் தேசியஜனநாயககட்சியை விலகக்கோரி ஊர்வலம்

(லண்டன்)

ஜேர்மனிய ஆளும் தேசிய ஜனநாயகக் கட்சியை தடை விதிக்க வேண்டும் என்ற கோரிக்கை ஜேர்மனிய பாராளுமன்றத்தில் வலுப் பெற்றுள்ளது.

6 ஆயிரம் உறுப்பினர்களைக் கொண்ட தேசிய ஜனநாயகக்கட்சி வெளிநாடுகளுக்கு எதிரான கொள்கைகளை தீவிரமாகக் கடைப்பிடித்து வருவதனால் அது ஜேர்மனிய ஜனநாயகத்திற்கு குந்தகம் விளைவிப்பதாக காரணம் காட்டியே இவ் எதிர்ப்பு அலை வெளிக்கிளம்பியுள்ளது.

இதேசமயம், அரசின் கொள்கைகளை எதிர்த்து அண்மையில் ஜேர்மனிய பெர்லின் நகரில் மாபெரும் ஊர்வலம் ஒன்று நடத்தப்பட்டது.

இதில் 2 இலட்சத்திற்கும் மேற்பட்ட எதிர்ப்பாளர்கள் கலந்து கொண்டனர். (உ)

## அமெ. செனட்டராகும் முதல் இந்தியர் சௌத்திரி

(மினி சோட்டா)

அமெரிக்காவின் மினி சோட்டா மாநிலத்தில் ஜனநாயகக் கட்சியின்பிரதிநியாக சட்டீன் சௌத்திரி செனட்டாரகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்,

இப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படும் அமெரிக்காவைச் சேர்ந்த முதல் இந்தியர் இவர் ஆவர்,

மினி சோட்டா மாநிலத் தேர்தலில் குடியரசுக் கட்சியைச் சேர்ந்த டோன்போசனை இவர் தோற்கடித்தார். இதன்மூலம்தேர்தலில்வெற்றி வாய்ப்பை இவர் பெற்றுக் கொண்டார், (து)

## மந்திரி முரசொலி மாறன் உடல்நிலை தேறுகிறார்

(சென்னை)

இந்திய மத்திய அமைச்சர் முரசொலி மாறனின் உடல் நிலை தேறி வருவதாக ஜேர்மன் டாக்டர் தெரிவித்தார்.

சென்னை அப்பலோமருத்துவமனையில் இருதய நோய் காரணமாக இருவாரங்கள் இவர் சிகிச்சை பெற்று வருகிறார். இவரின் வைத்தியத்திற்காக வந்திருந்த ஜேர்மனி டாக்டர் ஹாட்குட் மாறன் பற்றிக் குறிப்பிடுகையில், அமைச்சருக்குஇருதய அறுவை சிகிச்சையோ இருதய மாற்று சிகிச்சையோ செய்யத் தேவையில்லையென்றும் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில் முரசொலி மாறன் இரண்டு வாரங்களில் குணமாகி தனது வழமையான வேலைகளைக் கவனிப்பார் என்று தெரிவித்தார். [து[

## இந்தோனேசியாவில் சுதந்திர ஆதரவுப் பேரணி வன்முறை வெடிக்கும் அபாயம்

(ஜகார்த்தா)

இந்தோனேசிய சுதந்திர ஆதரவுப் பேரணியை அடுத்து அங்கு பெரும் வன்முறைகள் வெடிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

அரச எதிர்ப்பாளர்களால் மேற்கொள்ளப்படவிருக்கும் இவ் சுதந்திர ஆதரவுப் பேரணியை தடுக்கும் நடவடிக்கைகளில் அரசபடையினர் முழுமூச்சாக ஈடுபடுத்தப் பட்டுள்ளனர்.

இந்தவகையில், இப்பேரணியில் கலந்து கொள்ளச்சென்ற மக்கள் கூட்டத்திடையே பொலிஸ் பிரிவினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில்14பேர் கொல்லப்பட்டனர்.

அத்துடன் பேரணியில் கலந்து கொள்ளும் மக்கள் சென்ற வாகனங்களின் ரயர்களை துப்பாக்கியால் சுட்டுச் சேதப்படுத்தி அவர்கள் முயற்சியை முறியடிக்கும் பணியிலும் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர். (உ)

## நடிகர் திலகம் சிவாஜி மருத்துவ மனையிலிருந்து வீடு திரும்பினார்

(சென்னை)

மார்பு நோய்ச் சிகிச்சைக்காக நடிகர் திலகம் சிவாஜி கணேசன் சென்னைஅப்பலோ மருத்துவமனையில் சேர்க்கப்பட்டதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அவரது உடல் நிலைசீராக இருப்பதாகவும், ஆபத்தான கட்டம் எதுவும் அவருக்கு ஏற்படவில்லை என்றும் அப்பலோ மருத்துவமனை வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

இரத்த ஓட்டத்தை சீர் செய்யும் பேஷ்மேக்கர் கருவியின் செயற்பாட்டை பரிசோதிப்பதற்காகவே இவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டதாக அறியப்படுகிறது.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அவர் தற்போது வீடு திரும்பிவிட்டதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

செவாலியர் விருதுபெற்ற இவர் தற்போதும் கூட சில திரைப்படங்களில் நடித்து வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க-து)

வெள்ளத்து அனைய மலர் நீட்டம் மாந்தர் தம்
உள்ளத்து அனையது உயர்வு.
- குறள்

வலம்புரி

## பேசுவது யாருடன்?

இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கு முன்னதாக அரசாங்கம் முக்கிய தமிழ்க்கட்சிகளுடன் பேசி ஓர் உடன்பாட்டிற்கு வர வேண்டும். அதன்பின்பே ஐக்கிய தேசியக் கட்சியுடன் பேசவேண்டும் என அக்கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கா கூறியுள்ளார்.

இனப்பிரச்சினைக்கான உத்தேச அரசியல் தீர்வுத் திட்டத்தை பொதுஜன ஐக்கிய முன்னணி பாராமன்றத்தில் முன்வைத்த போது அத்தீர்வுத்திட்டம் தமிழர்களுக்கு அதிக உரிமையை வழங்குகிறதென எதிர்த்தவர் ரணிலும் அவரது ஐக்கிய தேசியக் கட்சியும் என்ற உண்மையை எளிதில் உலகம் மறந்துவிடாது. அன்று உத்தேசஅரசியலமைப்பை எதிர்த்ததன் மூலம் தனது சுயரூபத்தை வெளிக்காட்டி அதனால் சாயம் கழண்டவர் ரணில். இந்நிலையில் அவ்வரசியலமைப்பு அரங்கேறாமலே உறங்கியது. இச்சந்தர்ப்பத்தில் பொதுத்தேர்தல் மீண்டும் பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சியைக் கைப்பற்றியது. இவை எல்லாம் நடந்தேறும் போது நோர்வேயின் விசேடதூதுவர் வன்னிக்குச் சென்று தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவருடன் பேசியுள்ளார்.

இவற்றையெல்லாம் பார்த்திருந்த ஐக்கியதேசியக் கட்சித் தலைவர் ரணில் புதியதொரு கதையைத்தொடங்கியுள்ளார். முக்கிய தமிழ் அரசியல் கட்சிகளுடன் பேசி ஓர் இணக்கப்பாட்டிற்கு அரசு வந்த பின்பே தம்முடன் பேசவேண்டுமென்பதே அதுவாகும்.

நோர்வேத் தூதுவரின் சமாதான முயற்சியின் வேகத்தைத் தடுப்பதற்கான ஓர் திருகுதாளமே இதுவென்பது தெளிவாகிறது

தமிழர்களின் அபிலாஷைகளை நிறைவுசெய்யக் கூடிய தீர்வு எதுவென்பதைத் தீர்மானிக்கும் வல்லமை உடையவர்கள் விடுதலைப் புலிகளே, அவர்கள் இணங்காத எந்தத் தீர்வும் இனப்பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவராது என்பது சர்வ உண்மை. இது விடயத்தில் தமிழ் அரசியல் கட்சிகளும், அரசு புலிகளுடன் தான் பேசவேண்டும் என்ற கருத்தை ஏற்கனவே தெரிவித்துள்ளனர்

எனவே இலங்கையில் சமாதானம் நிலைக்க வேண்டுமாயின் அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் பேசி ஓர் முடிவுக்கு வரவேண்டும். அதுவே புத்திசாலித்தனமும் கூட.

# சனி பகவான் வக்கிர மடைவது நற்பலனை ஏற்படுத்துமா?

**14.10.2000 ல் சனிபகவான் மேட இராசியில் வக்கிர மாற்ற மடைந்து 6 மாதங்கள் வரை சஞ்சரித்தபின் மீண்டும் 11.4.2001 ல் இடப இராசிக்கு மாற்றமடைகின்றது குருபகவான் இடப ராசியிலேயே 15-10 2000 முதல் 4 மாதங்களுக்கு வக்கிர சஞ்சாரம் செய்வார்.**

### மேடம் (அச்சுவினி பரணி, கார்த்திகை!)

குருபகவான் 15. 6. 2001 வரை தனஸ்தானமாகிய 2ம் இடபராசியில் சஞ்சரிக்கும் போது தனலாபம், பொருள் விருத்தி, குடும்ப சுகம் உண்டாகும். கடந்த காலத்தில் ஏற்பட்ட கஷ்ட நஷ்டங்கள் அகலும். மன அமைதி உண்டாகி நிம்மதி நிலவும். இலாபாதிபதியாகிய சனியும் வக்கிரமாவதால் பொருளாதாரம் சிறப்பாக அமையும். பழைய கடன்கள் தீர்க்கப்படும். புதிய தொழிலை ஆரம்பிக்கவும், அதில் முதலீடு செய்யவும் சூழ் நிலை உருவாகும். தேகாரோக்கியம் நன்றாக இருக்கும். குடும்பஸ்தானத்தில் சனீஸ்வரன் சேர்க்கையின்மையால் கணவன் மனைவியிடையே அபிப்பிராய பேதங்கள் அடிக்கடி தோன்றாது. குரு பலத்தால் உடனுக்குடன், சமரசம் ஏற்படும். இளைய சகோதர ஸ்தானத்தில் ராகு சஞ்சரிப்பதால், சகோதர விரோதம் காணப்படும். பணப் புழக்கம் பிரமாதமாக இருக்கும்.

**உத்தியோகத்தர்களுக்கு.**

ஜென்மச் சனியால் ஆறு மாதங்களுக்கு வேலைப்பழு உண்டு. சக ஊழியர்களின் உதவி ஒத்தாசைகள் கிடைக்கும், பதவியுயர்வு, அதனால் இடமாற்றம் கிட்டும். சிலர் தங்களுக்கு விருப்புள்ள பகுதிக்கு மாற்றல் பெறுவர். உயர் அதிகாரிகளின். மதிப்பும். ஆதரவும்|பெறுவர். உத்தியோகப் பெண்களும் ஏற்றம் அடைவர்.

**வியாபாரிகளுக்கு.**

பெரிய முதலீடுகளை ஆறு மாதங்களுக்கு மட்டுப்படுத்தல் நன்று. தங்களதுதொய்வான வியாபாரம் இனி தேக்கம் பெறாது. முதலுக்கேற்ற இலாபமடைவர். வங்கியிருப்புகள் ஏற்றம் பெறும். மன நிறைவும் கிட்டும்.

**விவசாயிகளுக்கு.**

மாரிகாலத்தில் விளைச்சல் அதிகரிக்கும். அரசமானியங்கள் உரிய காலங்களில் கிடைக்கும். விவசாய உற்

### சோதிட பலன்

பத்திகள் அதிகரிக்கும். சந்தைப் படுத்தலால் நல்வருமானம் கிட்டும். சேமிப்பு உண்டு.

**பெண்களுக்கு.**

தனம். பொருள், மனை குடும்பவிருத்திகள் படிப்படியாக உண்டாகும். பெண்கள் வாழ்வு சௌபாக்கிய யோகமாக அமையும். 7½ச் சனி நடுக்கூறு நடப்பதால் 6 மாதம் தேகத்தில் அபிமானம் அவசியம், சனிவிரதம் இருத்தல் நன்று. குடும்பத்தில் வேலைப் பழுவும் பொறுப்புகளும் அதிகரிக்கும்.

**மாணவர்களுக்கு.**

குரு, ராகு, கேதுக்களின் யோகசஞ்சாரத்தால் ஆசிரியர். மாணவர். பெற்றோர் உறவு சீரடையும். கல்வி வளர்ச்சி படிப்படியாக ஏற்றமடையும். பரீட்சைச் சித்தியுண்டு. கல்வியில் ஊக்கமும் விடாமுயற்சியும் தேவை. சிலருக்குப் புலமைப் பரிசில்களும். வெளிநாட்டுக் கல்விவாய்ப்பும் கிட்டும், உயர் கல்விவசதிகளும் ஏற்படும். தற்போது நடைபெறும் தெசாபுத்திகளின் பலமாக விருந்தால் மேற் குறிப்பிட்ட பலன்கள் ஏற்றம் அடையும்.

### இடபம் (கார்த்திகை 2, 3, 4 ரோகினி மிருக சீரிடம் 1,2 கால்கள்)

சனி பகவான் 14-10-2000 முதல் ஆறு மாதங்களுக்கு 12 லும் குரு ஜென்மத்தில் 8 மாதங்கள் வரை சஞ்சரிக்கும் 7½ முற் கூறு காலத்தில் ஆரோக்கிய பாதிப்பு. பொருளாதார நிலையில் அதிபதியான போக்கு, எதிர்பாராத செலவுகள், வீண் விரயங்கள் போன்ற அனுகூலமற்ற பலன்கள் 8 மாதங்கள் வரை ஏற்படும் சகோதரர்களால் உதவி ஒத்தாசைகள் காட்டாது. தனம், பொருள், மனை, வாகன விருத்தியின்மை உண்டாகும் இருக்கும் இல்லத்தில் குறைகள் இருந்து வரும். கணவன் மனைவி உறவில் திருப்தியேற்படாது. கொடுக்கல் வாங்கல்களில் சாதக நிலை கிட்டாது. கடன் தொல்லைகள் 6 மாதங்கள் வரை உண்டு. உத்தியோகத்தர்களுக்கு சக ஊழியர் ஒத்துழையாமை, கெடுபிடி மனக் கசப்புண்டு. ஆரோக்கியக் குறைவு, எதிர்பாராத இடமாற்றம் விருப்பில் செல்லும் நிலைமை மனதில் நிம்மதியின்மைஆகியவைதோன்றும். சிலருக்கு கூடுதல் பொறுப்பு அதிகாரிகளால் தொல்லை, வேலைப்பழு ஏற்படும்.

**வியாபாரிகளுக்கு:**

வியாபாரத்தில் தொய்வு நிலை தோன்றும். தொழில் மந்தம் உண்டு எதிர்பார்த்த இலாபம் கிட்டாது, போட்டி பொறாமைகளும் தனவரவு, பொருள் வரவில் தேக்கமும் உண்டாகும். கொடுக்கல் வாங்கலில், சிக்கல் பகைமை ஏற்படும்.

**விவசாயிகளுக்கு :**

விவசாய உற்பத்தி குறையும் வயல் வேலைகளில் ஊக்கம் குறையும் விவசாயப் பண்ணைகளில் இலாபம் கிடைக்காது அரசு வழியில் எதிர்பார்க்கும் கடன் உதவி இட்டாது. சந்தைப் படுத்தலால் நஷ்டம் உண்டாகும்.

**பெண்களுக்கு:**

தேக சுகயீனத்தால் வைத்தியச் செலவு அதிகரிக்கும் ஜென்ம வியாழன், 7½ சனி ஆரோக்கியம் குறைக்கும். வயிற்றுக் கோளாறு, புத்திர வழியில் செலவுகள், சோதனைகள் உண்டாகும். இல்லத்தில் சுபகருமங்கள் தடைப்படும். உறவினர்களால் தொல்லைகளுண்டாகும். தெசாபுத்திகள் பலமாகஇருந்தால் தீமையான பலன்கள் தணியும்.

**மாணவர்களுக்கு**

பாடங்கள் கற்பதில் பல முட்டுக்கட்டைகள் தோன்றும் தேக சுகயீனத்தால் வைத்தியச் செலவு அதிகரிக்கும், கல்வியில் ஆர்வம் குன்றும், பரீட்சைகள் தோல்வி சித்தியின்மை கிட்ட வாய்ப்புண்டு, ஆசிரியர், பெற்றோர் ஆதரவு குறையும் வெளியூர்ப் பயணங்களை கூடுமான வரை தவிர்க்க வேண்டும். கல்வியில் ஊக்கமும் விடா முயற்சியும் அவசியம். இடப ராசிக்காரர்களுக்குச் ஜென்மத்து வியாழன் 7½ முற் கூறுச் சனி தோஷ மிருப்பதால், வாரம் தோறும் குரு சனிக்கு பிரீதி செய்தால் நல்லது. இடபராசிக்காரர்களுக்கு 12ல் சனி மேடத்தில் 14 10-2000 முதல் 11-04-2001 வரை வக்கிர சஞ்சாரஞ் செய்யும் போது சற்று கஷ்டங்கள், தீமைகள் குறையும் தெய்வ வழிபாடு செய்யலாம், ஆலய தரிசனம் தேவை.

**த. சத்தியதாஸன்**

# பரமபிதா காட்டியபாதை

# நிலையான உலகில் மாறாத அன்பு வளர புதிய யுகத்தை நோக்கி நடை பயில்வோம்



இறைவனின் அன்பு இவ்வழகிய உலகமாகும். சக்திகளின் ஒட்டுமொத்தமான வடிவமே இறைவன். படைப்பின் பங்காளியாக மனிதன் பயன்பட வேண்டுமென்று இறைவன் திட்டம் கொண்டான். இணைந்து இருக்கும் போது மனிதன் இணையற்ற சக்தியைப் பெறுகின்றான்.

உறவுக்காகப் படைக்கப்பட்டவன் அது கிடைக்காத போது, அல்லது அது மற்றவர்களுக்குக் கிடைக்கத்தடையாக இருக்கும் போது மனிதத்துவத்திலிருந்து கீழிறங்கி விடுகின்றான். இவ்வித மனிதாபிமானங்கள் மரித்துப் போய்க்கொண்டிருப்பதனால், தன்னுடைய உண்மையான பலவீனங்களைக் கூட ஏற்றுக்கொள்ள, அதிலிருந்து விடுபடத் தயங்குகிறான். இப்படியான தன் வெறுப்பு இறைவனிடமிருந்தும் மக்களிடமிருந்தும் ஒருவனை அந்நியப்படுத்தி அவனது உணர்விலும், உறவிலும் மாற்றங்களை ஏற்படுத்துகின்றது.

**காணிக்கை**

நொருங்கிப் போயிருக்கும் தனி-இன- மனிதஉறவினைப் புதுப்பிக்க கடவுள் மனிதனைத் தம்மோடு ஒப்புரவாக்கினார். (2 கொரி 5; 19) இடுப்பொடிந்து கிடக்கும் சமுதாயத்துக்கு விடா முயற்சியோடு கட்டுப் போடும் கடவுளின் பிரதிநிதிகளாக எளியோர்க்கு நற்செய்தி சொல்லத் தங்களையே எளியோர்களாக ஆக்கிக் கொண்ட பல உள்ளங்களையும் காணலாம்.

**அன்ரனிஅபீர்**

ஏழைகளாக வாழாது விருந்துகளிலும், விழாக்களிலும் தம்மை முதன்மைப் படுத்தும் பரிசேயப் பரம்பரையினரை இயேசு இன்றும் சாடிக் கொண்டே இருக்கிறார். இயேசு காணிக்கைப் பெட்டியின் அருகே அமர்ந்திருந்து காணிக்கை போடுகின்றவர்களை அவதானித்தார். பணக்காரர் மிகுதியாகப் போடுவதையும் ஒரு ஏழைக் கைம் பெண் இரண்டு செப்புக்காசுகள் போட்டதையும் பார்த்து ஏழைப் பெண்ணே மிகுதியாகப் போட்டாள். ஏனென்றால் அவள் தன்னிடம் உள்ளது எல்லாம் போட்டாள். ஏனையோர் தமக்கு மீந்திருப்பதைப்போட்டனர்.

இவ்வாறுதான் எம்மில்பலர் எம் சமுதாயத்துக்கு சேவை புரிகின்றார்கள். தம்மைப் பெரியவர்களாக்கிக் கொள்வோர்களே மலிந்துள்ளனர். அந்த ஏழைபோன்று சமூக வளர்ச்சிக்காக தனது நேரத்தை, உடலுழைப்பை, அறிவுத்திறமையை, ஏன்? செல்வத்தைபகிர்ந்துகொள்ள ஆயத்தமாக இருக்கின்றார்கள்,

**மாறாத அன்பு**

அறிவியல் முன்னேற்றத்தால், சமூகத் தொடர்பு சாதனங்களால், பண்பாட்டுப் பரிவர்த்தனைகளால் பரந்துபட்ட இவ்வுலகம் பார்வைக்குள் வந்து விடுகின்றது. அதே அறிவியல்த் துறையினாலஒரு மனிதன்இன்னொரு மனிதனை அந்நியப்படுத்தி பொருளாதாரஆதாயத்தைத் தேட விளைகிறான். இறைவன் இயேசு இறுதிவரைமானிடரை அன்பு செய்து தம்முயிரையேஈய்ந்ததுபோல், மாறும் உலகிலும் மாறாத அன்பு கிறிஸ்துவின் ஆவியால் ஆட்கொள்ளப்பட்ட புதிய சமுதாயத்தை நோக்கி நடை பயிலுவோம். இறை உறவும் மனித உறவும் சங்கமிக்கும்.

### கலந்துரையாடல்

(மல்லாகம்)

வலி. தெற்கு. மேற்கு பிரதேச சபை எல்லைக்குள் இயங்குகின்ற கடைகள், வெதுப்பகங்களின் உரிமையாளர்களுடன் "சுகாதார விழிப்புணர்வு" பற்றிய கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு வலி. தெற்கு பிரதேச சபையில் நடைபெறவுள்ளது. (செ-ப-14)

### மண் அணை நீக்கம்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் சந்தியில் இராணுவத்தினரால் வீதித் தடைக்காக அமைக்கப்பட்டிருந்த மண் அணை நீக்கப்பட்டு பீப்பாக்கள் வைக்கப்பட்டுள்ளன.

இந்நடவடிக்கையை அடுத்து வீதிப் போக்கு வரத்துகள் இலகுவாகியிருப்பதுடன் வீதி நெருக்கடிகளும் தவிர்க்கப்பட்டுள்ளது.

(க-12)

# விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாவை கைது செய்து இந்தியாவிற்கு அனுப்பவேண்டும்

## சுப்பிரமணியசுவாமி வேண்டுகோள்

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்காவுடன்சமாதானப் பேச்சுக்கள் நடத்தவென, விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் செல்லும் பட்சத்தில் அவரைக் கைது செய்து இந்தியாவுக்கு நாடு கடத்த வேண்டும்.

இவ்வாறு இந்திய அரசியலில் சர்ச்சைக்குரியவரான சுப்பிரமணியம் சுவாமி சென்னையில் இடம் பெற்ற செய்தியாளர் மாநாடொன்றில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான சட்ட ரீதியான கடப்பாடு சந்திரிகாவுக்கு உண்டெனவும், நாடு கடத்தும் இன்ரபோல் அறிவித்தல் அவருக்கு ஏற்கனவே வழங்கப்பட்டிருப்பதாகவும் சுப்பிரமணியம் சுவாமி தெரிவித்துள்ளார்.

அத்துடன் லண்டனில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தை சந்தித்து மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக செயலர் வை. கோபால்சாமி பேசியதை காங்கிரஸ் கட்சி கண்டிக்கவில்லை என்பதையும் இச் செய்தியாளர் சந்திப்பில் சுவாமி சுட்டிக்காட்டியுள்ளார். (உ(

# கிரிக்கெட் ரசிகர்களுக்கு இலங்கை கண்தானம்

பங்களதேஷ் அணி தனது முதலாவது உத்தியோகபூர்வ ''டெஸ்ற்'' கிரிக்கெட் போட்டியில் பங்குபற்றுவதை முன்னிட்டு, பங்களாதேஷைச் சேர்ந்த 20 கண்பார்வையற்ற கிரிக்கெட் ரசிகர்களுக்கு இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை கண்தானச் சங்கத்தின் மூலம் கண்களைத் தானம் செய்வதற்கு ஏற்பாடு செய்துள்ளது.

இதன் முதற்கட்டமாக ஏற்கனவே இருகண்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன், மற்றைய கண்களை அடுத்தவாரமளவில் அனுப்புவதற்கு ஏற்பாடு நடைபெறுகிறது.

இந்தக்கண்களை அனுப்பிவைப்பதற்கு 3 லட்சம் ரூபா செலவாகுமென இத்திட்டத்தின் இணைப்பதிகாரி ஏ. வீரசிங்க தெரிவித்துள்ளார். (ஸ்ரீ)

# கிரிக்கெட் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட துடுப்பாட்ட சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ் மத்தியகல்லூரி மைதானத்தில், யாழ் மாவட்ட பாடசாலை அணிகளுக்கிடையே கிரிக்கெட் போட்டி நேற்று ஆரம்பமாகியது.

பதினேழு வயதுக்குட்பட்ட மாணவர்களிடையே நடைபெறும் இப் போட்டியில் நேற்றைய ஆட்டத்தில் யாழ் கொக்குவில் இந்துக் கல்லூரியை எதிர்த்து யூனியன் கல்லூரி அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ் யூனியன் கல்லூரி அணி அதன் முதலாவது இனிங்ஸில் சகல விக்கெற்றுக்களையும் இழந்து 95 ஓட்டங்களைப் பெற்றது.

இன்று தொடரும் இவ்வாட்டத்தில் யூனியன் கல்லூரியை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரி மோதவுள்ளது. (வ)

# கண்ணீர்ப் பூக்கள்

## சுப்பிரமணியம் தமிழினி

யாழ். மகாஜனாக் கல்லூரியின் 2000 ஆம் ஆண்டு உயர்தர மாணவி

செல்வி - சுப்பிரமணியம் - தமிழினி

அவர்களின் மரணச்செய்தி கேட்டு ஆழ்ந்த கவலை அடைவதோடு, சகோதரியின் ஆத்மா சாந்தியடைய எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

மாணவர்கள் (A/L 2000)
யாழ்-மகாஜனாக்கல்லூரி
தெல்லிப்பழை

(கி-1023)

# தே. அ. அட்டை வழங்க விசேட ஏற்பாடு

### புலிகள்...

ரட்ணசிறிவிக்கிரமநாயக்கா மேலும் தெரிவித்திருப்பதாவது;

இலங்கையில் நிலவும் பயங்கரவாதத்தை பேச்சுவார்த்தை மூலம் ஒழித்துக் கட்ட முடியாது. அதனை யுத்தத்தின் மூலமே ஒழிக்க வேண்டும். அது யுத்தத்தினாலேயே முடியுமென்றும் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

மக்கள் விடுதலைமுன்னணி (ஜே. வி. பி) ஈழ மக்கள் ஜனநாயகக்கட்சி[ஈ.பி டி.பி] ஆகியன ஆயுதமேந்திப் போராடிய அமைப்புக்களே. அவர்கள் தற்போது ஆயுதங்களைக் கைவிட்டு ஜனநாயக வழிக்குத் திரும்பியது மட்டுமல்லாமல் மக்களுடைய செல்வாக்கையும் பெற்றுள்ளனர். அதேபோல் புலிகளும் ஆயுதங்களைக் கீழே வைத்துவிட்டு ஜனநாயக வழிக்குத் திரும்ப வேண்டும்.

#### நோர்வே பேச்சுக்கள் பற்றி எதுவும் தெரியாது

விடுதலைப் புலிகளுடன் நோர்வே அரசின் விசேட தூதுவர் வன்னியில் நடத்திய பேச்சுக்கள் குறித்து எனக்கு முழுமையான தகவல்கள் எதுவும் தெரியாது. ஆனால் பேச்சு வார்த்தை என்னும் பெயரில் விடுதலைப் புலிகள் அரசாங்கங்களை ஏமாற்றி வந்தமையே வரலாறாக இருக்கிறது.

கடந்த பாராளுமன்றத் தேர்தலில் சிஹல உறுமய போன்ற கட்சிகள் வெற்றி பெற்றமை எனக்குப் பெரும் கவலை அழிக்கிறது. இனவாதக் கட்சிகளால் தான் மேலும், மேலும் வன்முறைகள் பெருகி வருகின்றன.

#### ஜனநாயக வழிக்கு வந்து மக்கள் செல்வாக்கை பெறவும்

விடுதலைப் புலிகள் ஜனநாயக வழிக்கு திரும்பினாலும், மக்களுடைய செல்வாக்கைப் பெறுவார்களா? என்பது கேள்விக்குரியதொன்றாகும். ஆனால் ஜே. வி. பி

# கொடுப்பனவு வழங்கல்

(அரியாலை)

உடுவில் வடக்கு ஜே-186 கிராம உத்தியோகத்தர் பிரிவில் தங்கியுள்ள இடம் பெயர்ந்த குடும்பங்களுக்கு கடந்த 10ம் திகதி முதல் 2 ஆயிரம்ரூபா கொடுப்பனவு சுன்னாகம் மக்கள் வங்கிக் கிளைமூலம் வழங்கப்படுகிறது

இக்கொடுப்பனவை இது வரை பெறாதோர் கிராம உத்தியோகத்தர் அலுவலகத்தில் தமது தொடர் இலக்கத்தை அறிந்து பணத்தைப் பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-106)

# யாழ்மாநகரசபையால் போயா தினங்களில் வியாபாரம் பாதிப்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ் நகர நவீன சந்தையின் உட்புறம்போயாதினங்களில் மாநகரசபையினால் பூட்டப்படுவதால் உட்புறத்திலுள்ள வியாபாரநிலையங்களை திறக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது எனினும் யாழ். நகரிலுள்ள ஏனைய கடைகள் போயாதினங்களிலும் திறக்கப்பட்டு வியாபாரம் நடைபெறுகிறது.

இதனால் தமது வியாபாரம் பாதிப்படைந்துள்ளதாக நவீனசந்தையின் உட்புற வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து தாம் யாழ், மாநகரசபைக்குப் பலதடவைகள் முறைப்பாடு செய்திருந்தபோதிலும் அது தொடர்பாக எதுவித நடவடிக்கைகளும் இதுவரை அப்பகுதியில் மேற்கொள்ளப்படவில்லையென வர்த்தகர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (ந)

### தரைவழிப் பாதை...

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கும், மற்றும் கொழும்பில் உள்ள வெளிநாட்டு தூதுவர்களுக்கும் அனுப்பி வைக்கப் படவுள்ளது. (ம)

#### நிபந்தனையுடன் பேச்சும் இல்லை, யுத்தநிறுத்தமும் இல்லை,

இதேவேளை நேற்று ஹொறணையில் நடைபெற்ற சுதந்திரக் கட்சியின் மகாநாட்டில் உரையாற்றும் போது! விடுதலைப் புலிகளுடன் முன்நிபந்தனையுடன் பேச்சு வார்த்தை இல்லை என்றும் எவ்வகையிலும் யுத்த நிறுத்தம் மேற்கொள்ளப்படமாட்டாதென்றும் இராணுவ நடவடிக்கைகளிலும் எந்த விதமான மாற்றமும் செய்யப்படமாட்டாதெனவும் தெரிவித்த பிரதமர், ஜனாதிபதி கூட இராணுவ நடவடிக்கையில் எவ்வித மாற்றமும் இல்லை என்று பாராளுமன்றத்தில் கூறியுள்ளார். என்பதை அவர் சுட்டிக்காட்டினார்.

### உடன்...

டப்பட்டிருந்தது. இதனால் நிவாரணம் பெறும் மக்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கியிருந்தனர். இதனையடுத்தே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உடன் நிவாரணத்தை வழங்குமாறு யாழ் அரச அதிபருக்கு உத்தரவிட்டுள்ளார். (ந)

### இனப்பிரச்சினை...

என்று தெரிவித்தார்.

அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் தலைவரும் யாழ். மாவட்ட எம். பியுமான அ.விநாயகமூர்த்தி கருத்துத் தெரிவிக்கையில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் அரசு தொடுத்திருக்கும் யுத்தத்தை உடனடியாக நிறுத்தி நிபந்தனைஏதுமின்றி விடுதலைப்புலிகளுடன் பேச வேண்டும். தமிழ்க் கட்சிகளுடன் பேசி காலத்தை கடத்த முயற்சிக்கக் கூடாது என்று தெரிவித்துள்ளார்.

ரெலோ அமைப்பின் தலைவரும் வன்னி மாவட்ட எம். பியுமான செல்வம் அடைக்கலநாதன் கருத்துத் தெரிவிக்கையில்,

# தே. அ. அட்டை வழங்க விசேட ஏற்பாடு

(கொழும்பு)

எதிர்வரும் டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள க. பொ. த. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் நலன் கருதி தேசிய அடையாள அட்டைகளை வழங்குவதற்கான ஏற்பாடு ஒன்றை ஆட்பதிவுத் திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

இதன்படி இன்றும் நாளையும், அதே போன்று 18ம், 19ம் திகதிகளிலும், மற்றும் 25ம், 26ம் திகதிகளில் காலை 9 30 மணிமுதல் மாலை 4 மணி வரை ஆட்பதிவுத் திணைக்களத்தினால் தே. அ. அட்டைகள் விநியோகிக்கப்படவுள்ளது.

அடையாள அட்டை பெறுவதற்காக விண்ணப்பித்து, இது வரை கிடைக்கப் பெறாத பரீட்சார்த்திகள் ஆட்பதிவுத் திணைக்களத்திற்கு நேரில் சென்றோ அல்லது 583199 என்ற தொலைபேசி இலக்கத்திலோ தொடர்பு கொள்ளுமாறு ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளர் விஜயரணதுங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை அதிபரின் கடிதம் ஒன்றைப் பெற்று வரும் ஆசிரியர் ஒருவர் சம்பந்தப்பட்ட பாடசாலை பரீட்சார்த்திகளின் தே. அ அட்டைகளை பெற்றுச் செல்ல முடியுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ)

## உள்ளூராட்சி ..

வருடங்களுக்கு உள்ளூராட்சி அதிகாரங்களை நீடிப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளதாகவும் தெரியவருகிறது.

இதேவேளை இந்த தேர்தல் முறை தொடர்பாக சகல கட்சிகளுடனும் அரசு பேச்சு வார்த்தை நடத்தவுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ)


ஸ்ரீசெல்வா

(யாழ்ப்பாணம்)

விஜய், சிம்ரன் நடித்த

ப்ரியமானவளே

10.30மட்டும்

கார்த்திக், மாளவிகா நடித்த

சீனு

புதிய வெளியீடு

[கி-688] 2.30மட்டும்


லும், மக்களுடைய செல்வாக்கைப் பெறுவார்களா? என்பது கேள்விக்குரியதொன்றாகும். ஆனால் ஜே. வி. பி ஜனநாயக வழிக்குத்திரும்பிய போது ஆரம்பத்தில் மக்கள் ஆதரவு பெற்றிருக்கவில்லை. ஆனால் தற்போது மக்கள் ஜே. வி. பி. யை அங்கீகரித்துள்ளனர். இதனைப் போல் விடுதலைப் புலிகளும் வர முடியும் என்று பிரதமர் அப்பேட்டியில் தெரிவித்துள்ளார்.

வித மாற்றமும் இல்லை என்று பாராளுமன்றத்தில் கூறியுள்ளார். என்பதை அவர் சுட்டிக்காட்டினார்.

நோர்வே அரசு சமாதான முயற்சியில் ஈடுபட்டு வரும் இவ்வேளையில் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்காவின் போட்டியும், உரையும் அரசியல் அவதானிகள் மத்தியில் பெரும் சந்தேகத்தையும் ஆச்சரியத்தையும் ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வ)

வரும் வன்னி மாவட்ட எம். பியுமான செல்வம் அடைக்கலநாதன் கருத்துத் தெரிவிக்கையில்,

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு அரசு முக்கியமாக விடுதலைப் புலிகளுடனேயே பேசவேண்டும். எங்களுடன் பேச வேண்டுமென்று நாம் கூறவில்லை. புலிகளுடனான பேச்சுக்களை காலதாமதமின்றி அரசு மேற்கொள்ள வேண்டுமென்று கூறியுள்ளார் [வ]


திருமண நல்வாழ்த்து

திரு- திருமதி- குலநாயகம்
அவர்களின் அன்பு மகன்
திருநிறைச் செல்வன்
சிவானந்தன்
(ரமேஸ்)

திரு- திருமதி- நடராஜா
அவர்களின் அன்பு மகள்
திருநிறைச்செல்வி
தமயந்தி

ஆகிய இருவரும் கனடா ஒன்ராறியோ நகரில் விக்கிரம ஆண்டு ஐப்பசித் திங்கள் 27-ம் நாள் (12-11-2000) இன்று இல்லறம் என்னும் நல்லறத்தில் இணைகின்றனர். இவர்களை சீரும் சிறப்புடன் பல்லாண்டு காலம்வாழ எல்லாம் வல்ல இறைவன் துணை நிற்க வாழ்த்துகின்றோம்.

திருமதி இ- குலநாயகமும்
பிள்ளைகளும்

465/16A வடக்கு வீதி,
நல்லூர்.

(கி-1024)



இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தினரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும்விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000 ஆம்ஆண்டு நவம்பர் மாதம் 12ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.